
என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

லண்டனில்
தரமான
பொருள்கள்
நிரு

March 2017


FREE ISSUE

லண்டன்
தமிழர்
# தகவல்
London Tamil's Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest





தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

**லட்சுமி ஜுவலர்ஸ்**

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


BRINGING
GREAT
FOOD
TO
LIFE...
Niru
Nelli
Orange Soda
Quento
NO 1 Brand
Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
# Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2048

பங்குனி

மலர் : 16

இதழ் : 165

மார்ச் - 2017



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!






வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

# AMIRTAA FOODS

## AMIRTAA CURRY POWDER

## அமிர்தா கறி மசால் பொடி

லண்டனில்




**என்றும் நல்ல பொருட்களை தேடி வாங்குங்கள்**

**அமிர்தா AMIRTAA**

லண்டன் ஏக விநியோகத்தர்

**கணேஷா தமிழ் கடை**

433 Bromley Road, Downham BR1 4PH




புதிய பொலிவுடன் இனிதே உங்கள் இல்லம் நோக்கி வருகிறது

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தொலைக்காட்சி

24 மணிநேரமும் கீழ்கண்ட தளங்களில் அம்மனை தரிசித்து மகிழுங்கள்...

**www.ammanealing.org** என்ற இணையத்திலும்,

சாலை டிவி மற்றும் **Smart Phone, Ipad, Tablet**

மேலதிக விபரங்களுக்கு :

**5 Chapel Road, London W13 9AE**

**email:** info@ammanealing.org, **Phone:** 0044 - 208 810 0835

Charity No: 1014409

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"


**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST** Founded on 10-08- 1991 Charity No: 1014409
5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485
www.ammanealing.com Email: info@ammanealing.org


கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது.

# முச்சக்கர வண்டி ஒன்றிற்கான பெறுமதி
# £50 பவுண்கள்.
# ஆலயத்தின் சார்பாக 100 வண்டிகள் வழங்கி உதவும் நோக்கத்தில் அடியவர்களின் நன்கொடைகளை எதிர்பார்த்துள்ளோம்.

**அவயங்களை இழந்து வலுவிழந்து துயருறும் ஈழமக்களின் வாழ்வைக் கட்டி எழுப்ப உங்கள் ஆதரவை அள்ளி வழங்குங்கள்.**

**Bank Details Name: SKTA Temple Trust - W139AE LLOYDS BANK**
**SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646**










# சங்ககாலத் தமிழர் வாழ்வியல்

இலக்கியஆய்வு நூலுக்கான 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்' வழங்கிய 'தமிழியல் விருது 2011', தமிழ் இலக்கியமேம்பாட்டுக்கான' தமிழியல் விருது 2014', இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவனமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவனமும் இணைந்து வழங்கும் 'இரா.உதயணன் இலக்கிய விருது 2016' என்ற மூன்று விருதுகளையும் பெற்றவர் ஆவார்.

தமிழன் தாயகமாம் ஈழத் திருநாட்டின் வடமாகாணத்தின் தென்மராட்சிப் பகுதியில் புகழ் பூத்தநகரான சாவகச்சேரி மண்ணில் நுணாவிலூர் என்னும் பூங்காவில் மலர்ந்தெழுந்த நுணாவிலூர் கார்த்திகேயன் விசயரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட 'சங்ககாலத் தமிழர் வாழ்வியல்' என்ற ஆய்வு நூலொன்று அண்மையில் வெளிவந்துள்ளது.

இந்நூலில் அறிவியல் பேசும் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியர் சூத்திரங்கள், சங்ககால மடலேறும் தலைவன், பண்டைத் தமிழர் திருமணங்கள், பிரிவொழுக்கமுறைகள், தலைவன் தலைவியர் உடன்போக்கு,வாழ்வியல்,களவழிநாற்பதின் மறமேம்பாடு, அறிவுச் சுரங்கமான புறநானூறு, கதை கண்டகாப்பியங்கள், சீவகசிந்தாமணி வாழ்வியல், களவியல் கொணரும் அம்பலும் அலரும் ஆகியவிடயங்கள் பற்றிஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

இந்நூலைப் பெறவிரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்.

K. Wijeyaratnam,
35, Southborough - Road,
Bickley, Bromley, Kent. U.K.BR1 2EA.
Edition : First Edition, 2016
Publishers: Wijey Publication, Telephone No: 020 3489 6569.
E-Mail: wijey@talktalk.net Price per copy: £2.99 + postage charges.

# பிரச்சனைக்குத் தீர்வு

தமிழ்நாட்டிலுள்ள புகழ்பெற்ற திருத்தலங்கள் எல்லாவற்றிலும் குறிப்பாக திருவண்ணாமலை, சிதம்பரம், திருநல்லாறு, திருமணஞ்சேரி, மதுரை மீனாட்சி, பழனி, திருச்செந்தூர் போன்ற கோவில்களில் பாக்கிய பஞ் சாங்கபடி எல்லா நிகழ்ச்சிகளும் நடக்கிறது. பாக்கிய பஞ்சாங்கமே வழக்கத்தில் உள்ளது.

லண்டனிலும் புகழ்பெற்ற East Ham முருகன் கோவில். ஈலிங் துர்க்கையம்மன் கோயிலிலும் வாக்கிய பஞ்சாங்கமே

ஆகவே சைவமக்கள் இதைப்பற்றி சிந்திப்பீர்களா?

லண்டனில் நடைபெற்ற முதலாவது சைவ மாநாட்டில் இந்த விடயம்பத்தி பேரூர் ஆதிணம் தன்னுடைய கருத்தை கூறியபோது தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சிகளை அனுசரித்து லண்டனில் அதே நாட்களில் அந்த திருவிழாக்கள் செய்தால் பிரச்சனைகள் தீரும்



1. இருந்தால் எழுந்திருக்காத பிள்ளையும், படுத்தால் எழுந்திருக்காத பெண்ணும் குடும்பத்துக்குத் தேவை.

மேலாட்டமாக பார்த்தால் இதன் கருத்து மாறுபாடாகத் தோன்றும்.

ஒரு சிறுவன் தாழ அமர்ந்துவிட்டால் பெரியவரைக் கண்டு எழுந்திருக்க வேண்டிய அவசியமில்லை. இது அடக்கத்தைக் குறிக்கும்.

ஒரு பெண் எல்லோருக்கும் உணவைக் கொடுத்துவிட்டு கடைசியில் படுத்தால் இடையே எழுந்திருக்க வேண்டிய அவசியம் வராது. இது பெண்ணின் தன்மையைக் குறிக்கும்.

2. ஆவது பெண்களாலே, அழிவதும்

# வாரியார் சுவாமிகள்

## ரசித்துத் தொகுத்த பழமொழிகள்

பெண்களாலே.

இந்த பழமொழிக்கு பெண்கள் குடும்பத்தை அழித்து விடுகின்றார்கள் என்று பொருள் கொள்கின்றனர். இது பிழை. பெண்கள்தாம் குடும்பத்தைக் கைதூக்கி விடுகின்றனர். ஆண்கள் குடித்தும், குதிரைப் பந்தயத்துக்குச் சென்றும், சீட்டாடியும் குடும்பத்தை அழிக்கின்றனர். தாய்க்குலமே சிக்கனமாக குடும்பத்தைக் காக்கின்றது.

அழிவதும் பெண்களாலே என்னும் சொற்றொடருக்குக் கணவனுக்கு வரும் துன்பங்களை மனைவி தன் முயற்சியினால் தீர்த்து வைக்கின்றாள் என்பது பொருள். இதற்குச் சான்றுகள், சந்திரவதி சாவித்திரி வரலாறுகள்.

3. கொன்றால் பாபம் தின்றால் போகும்.

என்னும் பழமொழிக்கு அடியில் வருகின்ற உண்மைப் பொருளை உணர்க.

ஓர் உயிரைக் கொன்றால் அந்தப் பாபம் கொன்ற ஓர் ஆத்மாவைத் தொடரும். எமன் அந்த ஆத்மாவைப் பாசக் கயிற்றால் கட்டி, அவன் தசைகளை வாயில் வைத்து, அடித்து நொறுக்கி, உண்ண வைப்பான். தன் மாமிசத்தை தானே உண்ண வேண்டிவரும்.

வருபவர்க ளோலை கொண்டு நமனுடைய தூத ரென்று

மடிபிடிய தாக நின்று தொடர்பேது

மயலதுபொ லாத வம்பன் விரகுடைய னாகு மென்று

வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள்

கருவியத னாலே றிந்து சதைகள்தனை யேய ரிந்து

கரியபுன லேசொ ரிந்து விடவேதான்

கழுழுனையி லேயி ரென்று விடுமென்றும்

அருணகிரிநாதர்.

4. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைவைத்தியன் அவான்.

இந்தப் பழமொழிக்கு உண்மையான பொருள் இது. இதில் பகரம் வகரமாகத் திரிகின்றனது. ஆயிரம் வேரை (மூலிகையை) க் கொண்டவன் அரை வைத்தியன்.

5. குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்.

இந்தப் பழமொழி பிழையாக வழங்கப்படுகிறது.

மோதகக்கை என்பதுதான் மோதிரக்கை என்று மருவிற்று.

மோதிரக்கையால் குட்டுப்பட்டால் உதிரம் வரும். மோதகக் கையையுடைய விநாயகரிடம் குட்டுப் பெற வேண்டும். இதுதான் இந்தப் பழமொழியின் பொருள்.

6. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது.

மொட்டைத் தலை - பிரணவம்

கால் - காற்று

கால் என்கின்ற பிராணவாயு முழம் நீளம் வந்து கழிகின்றது. அப்படியில்லாமல் மொட்டைத் தலையாகியய பிரணவத்துடன் முழம் நீளம் ஓடுகின்ற பிராண வாயுவைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதுதான் இந்தப் பழமொழியின் உண்மையான பொருள்.

7. ஆட்டை யாகத்தில் போடுவது பற்றி.

வேதங்களில் அஜம் என்ற ஒன்றை அக்னியில் ஆகுதி கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றது.

அஜம் என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

ஜம் - பிறப்பு, அ - இல்லை.

அஜம் பிறப்பில்லாதது. மூன்றாண்டுகாளன நெல் முளைக்காது. அந்தப் பழைய நெல்லை ஆகுதி தருமாறு வேதங்கள் கூறுகின்றன. இந்த நுட்பத்தை அறியாதவர்கள் அஜம் என்றால் ஆடு என்று ஒரு பொருள் உண்டு. அதனால் பழைய நெல்லை ஆகுதி கொடுக்காமல் ஆட்டை நெருப்பிலிட்டு வேள்வி செய்கிறார்கள். இதனை அருணகிரிநாதர்.

'அஜ அநியாயம் செய் வேதியரே'

என்று கண்டிக்கின்றார்.

8. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.

கர்ணன் குந்தி தேவியின் வேண்டுகோளின்படி பாண்டவர் பக்கம் சேர்ந்து ஆறு என்ற எண்ணிக்கையுடன் இருந்தாலும் மரணம் வரும்.

அப்படியின்றி, துரியோதனாதியர்களுடன் சேர்ந்து நூறில் ஒருவனாக இருந்தாலும் மரணம் உண்டு. இது தான் இந்தப் பழமொழியின் உண்மையான பொருள்.

9. இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவான்.

இறைவனுக்கு நமது உள்ளத்தை இடமாகக் கொடுத்தால் நம்மில் உள்ள மடம் அறியாமையை இறைவன் வேரோடு களைந்துவிடுவான். ஆகவே, நமது உள்ளத்தை இறைவனுக்கு இடமாகக் கொடுக்க வேண்டும்.

"உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற மெய்யா"

மாணிக்கவாசகர்

"............... நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்"

அப்பர்



10. உலகம் பலவிதம்

உலகம் எப்படி பலவிதமாக இருக்கும். ஒருவிதமாகத்தானே இருக்கும். மக்களைப் பெறுவதெல்லாம் பெண்கள் தானே. உண்பது வாய்தானே, நடப்பது கால்தானே. பலவிதமாக எப்படியிருக்க முடியும். இந்த உலகம் பலவிதம் என்பதற்கு என்ன பொருள். அம்பலத்தில் இறைவன் ஆடுகின்றான். உலகம் ஆடுகின்றது.

உயிர்கள் உய்யும் பொருட்டு எம்பெருமான் அம்பலத்திலே ஆடுகின்றான். அவன் ஆடவில்லையானால் உலகம் ஒரு விநாடி வாழாது. சேக்கிழார் பாடுவார். அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான். மற்றவர்களெல்லாம் அறையில் ஆடுவார்கள். இவர் அம்பலத்தில் ஆடுவதினாலே உலகம் நிலைத்திருக்கிறது. எனவே, உலகு அம்பலவிதம். இது புணரும்போதும் உலகு+அம்பல+விதம் = உலகம்பலவிதம் என்றானது.

சமீரா மீரான்

# அன்பு மகளின் அருமை மகளுக்கு மூன்றாம் தலைமுறைக்கு முதல் தலைமுறையின் மடல்

என் அன்பு மகளின் அருமை மகளே!

உன் தாயும் தந்தையும் உனக்கருகில் இருந்து உனக்கு அன்பையும் அறிவையும் மட்டுமல்லாமல் உனக்குத் தேவையானவற்றையெல்லாம் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், உன் பாட்டியும் நானும் வெகு தூரத்தில் இருந்து கொண்டு உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறோம். நானோ ஒவ்வொரு நாளும் எனக்குள்ளாகவே உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்.

வியப்பாக இருக்கிறதா?!

உண்மைதான், நீ எனக்கு அருகில் இருப்பது போன்றும் என் விரல் பிடித்து நடந்து வருவது போன்றும் கற்பனை செய்து கொண்டு உன்னிடம் பேசுவதாக நினைத்துக்கொண்டு எனக்கு நானே பேசிக் கொண்டிருக்கிறேன். அப்போது என் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களையெல்லாம் எழுத்தாக்க விரும்பினேன். அதன் விளைவுதான் இந்த மடல்.

உனக்கென்று பல செய்திகளைத் தொகுத்து, சேமித்து வைத்திருக்கிறேன். அவை உனக்கு வழிகாட்டவும், உன் அடுத்த தலைமுறையை நீ வழிநடத்தவும்தான். இப்போது அவற்றை நான் சொன்னால் உனக்கு ஒன்றும் புரியாது; புரியும்

வயதில்லை உனக்கு. உனக்கு அவை புரியும் வயதில், எடுத்துச் சொல்ல நான் இருக்க வேண்டுமே! அப்படி இருந்தாலும் சொல்லும் நிலையில் இருக்க வேண்டுமே! அதனால்தான் உனக்குச் சொல்ல நினைப்பவற்றையெல்லாம் இப்போதே எழுதி வைக்கிறேன். உனக்காக நான் சேர்த்து வைக்கும் சொத்து இது.

அருள்மொழிகளும் அறிவுரைகளும் உன்னை உருவாக்க அல்ல. உருவாகும் உனக்குத் துணையாக வருவதற்குத்தான்.

இறை நம்பிக்கை மிகுந்த என் ஆசிரியர் ஒருவர், வகுப்பில் ஒரு நாள் சொன்னார், 'வாழ்க்கையில் நாம் பலவற்றைப் பெறுகிறோம்; இழக்கிறோம். எந்த ஒன்றின், எவர் ஒருவரின் இழப்பையும் சில நாளில் மறந்து போகலாம். ஆனால் ஒரே ஒருவரின் இழப்பை மட்டும் நாம் இறக்கும் வரையில் மறக்கவே முடியாது. அந்த ஒருவர் யார் தெரியுமா?' என்று கேட்டுவிட்டு விடுகதையைப் போல் ஒரு குறுங்கதை சொன்னார்.

ஒன்பது மாதமே ஆன குழந்தையிடம் இறைவன் சொன்னான்.

'நீ நாளை பூமியில் பிறக்கப் போகிறாய்!'

குழந்தை அழுதபடியே கேட்டது, 'உன்னிடம் மட்டும்தானே எனக்குப் பேசத் தெரியும். அங்கே உள்ளவர்களிடம் நான் எப்படிப் பேசுவேன்?

இறைவன் சொன்னான், 'கவலைப்படாதே நான் ஒரு தேவதையை ஏற்கனவே பூமிக்கு அனுப்பியுள்ளேன். அவள் உனக்குக் கற்றுத் தருவாள்!'

'அந்தத் தேவதை வேறு என்ன சொல்லித் தருவாள்?'

'நல்ல சொற்களையும், நல்ல செயல்களையும் அந்தத் தேவதை உனக்குச் சொல்லித் தருவாள்'

'உன்னை மட்டும்தானே வணங்கவும் செய்கிறேன். என் வருத்தங்களை, துன்பங்களை உன்னிடம் தானே சொல்வேன், அங்கே யாரிடம் சொல்வேன்?'

'அந்தத் தேவதை அவற்றைக் கருணையுடன் கேட்பாள்'

'அங்கே நான் உன்னை எப்படி வணங்குவது?'

நீ அந்தத் தேவதையை மதித்துப் போற்றினாலே போதும்'

அந்த தேவதையை நான் எப்படி அடையாளம் காண்பேன்?

மிக எளிது. மக்கள் அந்தத் தேவதையை உன் தாய் என்று சொல்வார்கள்.!

ஆசிரியர் அன்று சொன்னது இன்றும் என் நினைவில் நிற்கிறது.

என் இனிய மகளின் இன்ப மகளே!

'அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை' என்றும் 'தாயிற் சிறந்த கோவிலுமில்லை' என்றும் கவிஞர்கள் சொல்வார்கள். ஆனால் தாய் என்பவள் தாயகா மட்டும்தான் இருக்க முடியும். தெய்வத்தை மறுப்பார் உண்டு இங்கே. ஆனால் தாயை மறுப்பார் உண்டோ? கோவிலைப் போற்றாதாரை எல்லோரும் தூற்றுவதில்லை. ஆனால் தாயைப் போற்றாத எவரையும் இந்த உலகம் போற்றுவதில்லை!.

இறைவனுக்கு இணை வைக்கக் கூடாது என்போர் கூட இறைவனுக்கு அடுத்த இடத்தை தாய்க்குத்தான் வழங்கியிருக்கிறார்கள். அது மட்டுமன்று தாயின் காலடியில்தான் சொர்க்கமே இருக்கிறது என்கிறார்கள், அவர்கள்.

தாயைப் புரிந்து கொண்டால்தான் நமக்கு வாழ்வே புரியும். தாய் உன்னிடம் எப்போதும் அன்பு காட்டுவாள், நீ அவளிடம் அன்பு காட்டாத போதும் கூடு.

யார் வேண்டுமானாலும் உன்னை

ஏமாற்றலாம் உன் தாயைத் தவிர.

உன்னிடம் முதலில் பேசுபவள் உன் தாய்தான். நீ பேசுவதை முதலில் கேட்பவளும் அவள்தான். உன் பேச்சும் மூச்சும் அவள் தந்ததுதான்.

என்னைப் பெற்ற தாயும், தாயாய் இருந்து என்னை வளர்த்தோரும் எனக்குச் சொன்னவையும், நான் படித்தறிந்து, பட்டுணர்ந்து பெற்றவையும் ஏராளம்.

எல்லாவற்றையும் உனக்கும் சொல்லிவிட வேண்டும் என்றுதான் தொடங்கியிருக்கிறேன்.

தொடங்கிவிட்டதை எப்போது முடிப்பேன், எங்கே முடிப்பேன் என்பதைக் காலம்தான் முடிவுசெய்யும்!

மகளின் மகளே!

பலரிடம் காணக்கிடைக்காத, சிலரிடம்



மட்டுமே நான் கண்ட ஒரு பண்பு பணிவு. சிலர் நினைக்கலாம் பணிவு என்பது அடிமைத்தனம் என்று. ஆனால் பணிவுதான் நம் ஆளுமைக்கான அடிப்படைப் பண்பு.

எளிமையும் பணிவும் எப்போதும் நம்மை வலிமையுடன் வைத்திருக்கும், பெரும் புயலில் மரங்கள் எல்லாம் சாய்ந்து விடலாம். ஆனால், பணிவு காட்டும் நாணல் சாய்வதில்லை. வளைந்து கொடுப்பது தவறன்று. ஆனால் வளையும்போது ஒடிந்து விடக்கூடாது. பள்ளிப் பாடங்களோடு இந்தப் பண்புப் பாடங்களையும் நீ கற்றுக்கொள்ள வேண்டும்: அவை உனக்குக் கற்றுத் தரப்பட வேண்டும்!

பிள்ளைகளுக்குக் கற்றுத்தரும் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்கள்தாம். பிள்ளைகளின் நலன் பேணுவதில் ஆசிரியர்களை இரண்டாம் பெற்றோர்கள் எனலாம். பெற்றவர்கள் ஆனாலும் ஆசிரியர்கள் ஆனாலும் தங்களின் கற்பனைப்படி பிள்ளைகளை வளர்ப்பதைவிட, பிள்ளைகளின் கனவுகளை, கற்பனைகளை, திறமைகளை அறிந்து அவர்களை அவர்களாக வளர்ப்பதுதான் சரியாக இருக்கும் என்று உன்னை வளர்க்கும் உன் அன்னைக்கு இப்போது நான் சொல்கிறேன்.

ஆனால் அப்படி வளர என்னை யாரும் அனுமதிக்கவில்லை. வயதான பிறகு, இப்போதுதான் நான் நானாக வளர்ந்து கொண்டிருக்கிறேன்!. நீ, நீயாக வளர வேண்டும்! இதுதான் உன்னைப் பற்றிய என் கனவு.

என் தங்க மகளின் தமிழ் மகளே!

வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் நிறைந்தது. வெற்றியும் தோல்வியும் கலந்தது. வெற்றி நம்மை ஊக்கப்படுத்தும்; தோல்வி நம்மைப் பக்குவப்படுத்தும். வலிகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. நமக்கு வலி ஏற்படுத்தும் எந்த ஒரு சூழ்நிலையும் காலத்தால் வழங்கப்படும் நன்கொடையாகும். ஏனெனில் அத்தகைய சூழல்களால்தாம் நாம் மற்றவர்களை விட மாறுபட்டவர்களாக, தனித்தன்மை உள்ளவர்களாக வளர்த்தெடுக்கப்படுகிறோம். எனவே மாண்பு மிக்க மனிதனாகச் சிறந்து விளங்க, அந்த வலி தரும் தருணங்களைச் சந்திக்கத் தயாராகவே இருக்க வேண்டும்.

நம் கையில் இருக்கும் குடை மழையை நிறுத்திவிடப் போவதில்லை. ஆனால் மழையை எதிர்கொள்ள நமக்குத் துணைபுரிகிறது. அதுபோல் தான் மனத்துணிவு என்பதும். வாழ்வின் எத்தகைய எதிர்ப்புகளையும் சந்திக்க நமக்குத் துணை நிற்கும். வலிகளைத் தாங்கும் வழிகளை அறிந்தால் வாழ்வில் என்றும் வருத்தமிருக்காது.

எந்தச் சூழலைஹயும் எதிர்கொள்ள உள்ளத்தையும் உடலையும் நாம் தாயராக வைத்துக்கொள்ள வேண்டும். அர்ப்பணிப்போடு ஒரு செயலைச் செய்கிறவர்களுக்கு வெயில், இடி, மின்னல், மழை, புயல் என்று ஏதுமில்லாத அமைதியான வானிலை எப்போதும் அமையாது. ஆனாலும் தங்களின் கடுமையான உழைப்பின் விளைச்சலை அவர்கள் நிச்சயம் அறுவடை செய்வார்கள்.

என் செல்ல மகளின் செல்வ மகளே!

இலட்சியம் இல்லாத வாழ்க்கை எவருக்கும் பயன்தராது. முயற்சியும் உழைப்பும் இல்லாமல் இலட்சியங்களை அடைய முடியாது. அதனால்தான் உழைப்பே உயர்வுதரும், கடின உழைப்புக்கு ஈடு இணை இல்லை என்றெல்லாம் நம் முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். இலட்சியம் கொள்; துணிந்து செல்; உழைப்பால் உயர்ந்து நில்.

இன்னும் சொல்வேன்!

உன் அன்புத் தாத்தா.

உ
சிவமயம்

Ø : (04368) 236328

ஆகமப்பிரவீனர்
**S.D. அய்யாசாமி குருக்கள்**
பரம்பரை பூஜை ஸ்தானீகம்,
7, சன்னதி தெரு,
திருநள்ளார் - 609 607.

Aghamapraviner
**S.D. AYYASAMY GURUKKAL**
Heriditary Pooja Sthaneegam
7, Sannathi Street,
THIRUNALLAR - 609 607.

உ
சிவமயம்
ஸ்ரீ பிராணாம்பிகை துணை.

தேதி : 8-3-2017

நா. சிவானந்த ஜோதி
ஆசிரியர்
தமிழர் தகவல்

நாங்கள் கேட்டுக்கொண்ட இணங்க இந்த தகவல் அனுப்புகிறோம். திருநள்ளாறில் சனிமாற்றம் இந்த வருடம் மார்கழி மீ 4ம் தேதி (19-12-2017) நடைபெறுகிறது. 90% வாக்கிய பஞ்சாகப்படி அன்றுதான் நடக்கிறது. என்பதை அறிய தெரிகிறோம்.

இப்படிக்கு,
S.D அய்யாசாமி
(கையொப்பம்)

திருநள்ளார் அய்யாசாமி குருக்கள் தமிழர் தகவல் ஆசிரியருக்கு எழுதியளித்த மடல்



# பனி எரியும் காலம்

## பார்த்திபன்



கடைசி மூட்டையையும் தூக்கி கீழே வீசிவிட்டு, நிமிர்ந்து, நாரி உளைவெடுத்து, வியர்வையைக் கையால் வழித்து எறிந்து லொறியில் சாய்ந்து கொண்டபோதுதான் அந்த யோசனை வந்தது. இந்த லொறி என்ரை லொறியாயிருந்தா... முருகேசு ஒரு மூட்டையில் குந்தியிருந்து ஆட்களின் சுறுசுறுப்பை அளந்துகொண்டிருந்தான். பணம் பூசிய உடம்பு. அவனருகில் போய்...

"முருகேசு... அடிக்கடி கொழும்பு போய் வாறாய். கட்டுப்படியாகுதுதானே...?"

"பெரிசா சொல்லுறதுக்கில்லையடாப்பா. அங்கை வெளிக்கிட்டு இஞ்சை வாறவரைக்கும் கப்பம் கட்டிக்கொண்டே வரவேணும். இதுக்கெண்டே ஒவ்வொரு சந்தியிலும் பரியர் போட்டுக்கொண்டு தடியங்கள் நிற்கிறார்கள். சண்டையை வைச்சே நல்லாய் உழைக்கிறாங்கள். இவங்களுக்கும் எங்கடையதுகளுக்கும் வெட்டி மிஞ்சுறதைப் பொறுக்கி எண்ணலாம்."

"அப்ப இனிமேல் ஓட்டம் இல்லைப்போல..."

"இதையும் விட்டிட்டு என்ன செய்யிறது? வெள்ளியிரவு திருப்பி வெளிக்கிடுறன்."

ஆக, எவ்வளவு வெட்டினாலும்

முருகேசுக்கு மிஞ்சும். தொழில் பறவாயில்லைத்தான். எப்பிடிப் பாத்தாலும் நட்டம் வராதுபோலகிடக்கு. மோளுக்குக் கட்டின வீடு குடிபூரலும் வரப் போகுது. இது... நான்... அவனவன்ரை லொறியிலை சாமான் பறிச்சே முதுகு கூனிப் போச்சு. என்ன கொதாரிச் சீவியம். பிழைப்புக்கு வேறை வழி பாக்க வேணும்.

வீடு வந்து, குளியல் போட்டு, வாய்க்கு ருசியாய் சாப்பிட்டு, முன் விறாந்தையில் வந்து குந்தியபோது மறுபடியும் தலைக்குள் லொறி ஓடியது. சம்பாதிக்க வேணும். பிள்ளை குட்டிக்காறன்.

"ஏன்ரி... இஞ்சை வாவன்"

ஆட்டுக்கொட்டிலை விளக்குமாத்தால் கூட்டி, புளுக்கையளை அள்ளி ஒரு மூலையில் குவித்து, முறித்த கொப்பைக் கட்டித் தூக்கிக் கொண்டிருந்தவள் அவன் குரல் கேட்டு ஒரு முடிச்சுப் போட்டுவிட்டு வந்தாள். "என்னப்பா...?"

"இதிலை இரு. புதுசாய் ஒரு தொழில் தொடங்கினா என்ன?"

"என்ன இருந்தாப்போல. எங்கையென் காசடிச்சிட்டியளோ?"

"முருகேசு மாதிரி லொறி ஓடினா என்ன எண்டு யோசிக்கிறன்?"

"முருகேசருக்கு லொறி இருக்குது. ஓடுறார். நீங்கள் என்னத்தை வைச்சு ஓடப்போறியள். குழை கட்டிக் கொண்டிருந்த என்னைக் கூப்பிட்டு..." சலித்தபடி அவள் எழுந்தபோது, அவன் கையைப் பிடித்திழுத்து மறுபடி இருத்தினான்.

"கொஞ்சம் இரேன். லொறி ஒண்டு வேண்டினா முருகேசு மாதிரி கொழும்பிலயிருந்து சாமான் வேண்டியந்து இஞ்சை விக்கலாம்"

பருத்தித்துறை ஊராம் பவளக்கொடி பேராம். சுத்தி வர இருக்கிற கடனுகளை அடைக்க வக்கில்லை. லொறி வேண்டப் போறியளோ...? ஏதேனும் போட்டிட்டியளே...?" சந்தேகமாய்ப் பார்த்தாள்.

"சும்மா நளினம் விடாமை யோசி. எத்தினை நாளைக்குத்தான் மற்றவனுக்குப் பறிச்சுக் குடுத்துக் கொண்டிருக்கிறது. நாலைப் பெத்துவைச்சிருக்கிறம். உப்பிடியே கைமாத்திலை சீவியம் போனா நாளைக்கு அதுகளுக்கெண்டொரு சீவியம் வேண்டாமே?"

"எல்லாம் சரியப்பா. லொறி வேண்டுறதெண்டா சும்மாவே. பயித்தங்காய் வேண்டிற மாதிரிக் கதைக்கிறியள்."

"எல்லாம் யோச்சுப் போட்டுத்தான் கதைக்கிறன். லொறியும் பாத்து வைச்சிட்டன். நல்ல லொறி. மலிவாய் தட்டலாம். கொஞ்ச வேலை செய்ய வேண்டி வரும்."

"ஆரென் சும்மா லொறி தாறன் எண்டவங்களே...?"

"ஏன் சும்மா தரவேணும். காசைக் குடுக்கிறம். வாங்கிறம்."

"அம்மாவாணை எனக்கொண்டும் விளங்கயில்லையப்பா"

"உன்ரை தம்பியை மறந்து போனியே...?"

"கண்ணனோ...?"

"வேறையார் வெளியிலையிலை இருக்கினம்?"

அவள் சடாரென நிமிர்ந்தாள். கண்ணன், ஜேர்மெனி, லொறி, காசு. "உங்களுக்கென்னப்பா விசரே. லொறி வேண்டிறளவுக்கு அவனிட்டை எங்காலை காசு? எல்லாத்தையும் இஞ்சாலைதான அனுப்பிக்கொண்டிருக்கிறான். காசு காசெண்டா அவனெங்கை போறது?"

"இனியெங்கை போவான். ஏற்கனவே ஜேர்மனிக்குப் போட்டான்தானே. இதெல்லாம் அவனுக்கொரு காசே."



"சும்மா கதையாதையுங்கோ. வெளிநாடெண்டாப்போல அவனென்ன காசிலை விழுந்து புரளுறானே? தங்கச்சியின்ரை கலியாணவீட்டுக்கு காசனுப்பியே இன்னும் கனகாலமாகேலை. நல்ல ஆள் நீங்கள்..."

"ஏன்ரி... நானென்ன வேறை கலியாணம் செய்யவே காசுகேக்கிறன்? சொந்தமா ஏதாவது தொழில் செய்து எங்கடை பிள்ளையளுக்கு ஏதும் சேத்து வைப்பமெண்டால் நீ பிறத்தியாள் மாதிரி கதைச்சுக் கொண்டிருக்கிறாய்" அவனுக்குச் சாடையாக எரிச்சல் வந்திருந்ததை அவள் கவனித்தாள்.

"கோவியாதையுங்கோப்பா. உவ்வளவு காசு அவனிட்டை இருக்குமே...?"

"வீட்டுக்குள்ளை அடைஞ்சிருக்கிற உனக்கு நாட்டுநடப்புகள் எங்கை விளங்கப் போகுது? வெளிநாட்டிலை இருக்கிறவங்களிட்டை இல்லாத காசு வேறை ஆரிட்டை இருக்கப் போகுது? உந்தச் சண்டையுக்கையும் பொம்பர் இடிக்க இடிக்க சனம் வீடு சுட்டுதெண்டா... எல்லாம் வெளிநாட்டுக்காசுதான்"

"எப்பிடியப்பா அவனிட்டை காசு கேக்கிறது...?"

"உன்ரை தம்பிதானே. இவ்வளவு நேரமும் நீ அவனிலை பாசத்தைக் கொட்டின மாதிரி அவனுக்கும் இருக்கும் தானே. அப்பப்ப இனிமேல் காசனுப்ப வேண்டாம். தொகையாய் லொறிக்குத் தரச் சொல்லு. எங்களுக்கு வருமானம் வந்தா

தான் காசு கொட்டத் தேவையில்லையெண்டு சிரிச்சுக் கொண்டு தருவான்."

"எதுக்கும் அம்மாவோட ஒருக்கா கதைக்கிறன்."

"விசர்க்கதயெல்லே கதக்கிறாய். அந்த மனிசி ஒருக்கா விக்கி கண்ணை கலக்கிச்சு தெண்டா உனக்கு காசு கேக்கிற எண்ணம் இந்த வருசத்திலை வராது."

"சரி. பின்னை கடிதம் ஒண்டு போட்டுப் பாக்கிறன்" என்றபடி எழுந்தாள்.

"கடிதம் எண்டா சுணங்கும், முருகேசுவின்ரை வீட்டை போய் போனிலை கதைப்பம்."

அவள் திரும்ப ஆட்டுக்கொட்டிலுக்கு வந்தபோது தம்பியின் முகம் மறைந்து ஆட்டுக்குட்டியளெல்லாம் அவள் பிள்ளைகளாய் தெரிந்தன.

இரண்டாவது அக்கா

அம்மாவுக்குக் கொஞ்சம் கூடி விளங்குதில்லை. எல்லாருக்கும் பெரிசாய் செய்து போட்டு, தங்கச்சிக்கு மட்டும் சும்மா தலையில தண்ணி வாக்கிறதெண்டா அவளுக்கு எப்படியிருக்கும். நாங்களென்ன ஒண்டுமில்லாத ஆக்களே. வெளிநாட்டிலை தம்பியிருக்கேக்கை நாங்கள் இப்பிடிச் செய்தால் முழுக்கசவாரங்கள் எண்டு சனம் பகிடியெல்லே பண்ணப் போகுது. அதோடை தம்பி கேள்விப்பட்டானெண்டால் தானொருத்தன் இருக்கிறதெண்டதையே மறந்து போனியளோ? எண்டு ஏசுவான்.

தங்கச்சியைப் பார்க்கையில்...

தலையிலிருந்து கால்வரை போர்த்திக்கொண்டு முடங்கிப் போய்க் கிடந்தாள். என்ன அதிசயம்! குஞ்சு குருமன்களோடை எட்டுக்கோடு விளையாடிக்கொண்டிருந்தவள் சட்டுப்புட்டென்று பெரிசாகியிட்டாள். உவளைப்போலத்தானே நானும்... வேண்டாம் வேண்டாமென்ன சோடிச்சு...

"இன்னும் படுக்கேலையே பிள்ளை...?" அம்மா வந்து நிலத்தில் குந்தினாள். கடைசிப் பாத்திரத்தையும் கழுவி கவிழ்த்து வைத்துவிட்டு வருகிறாள். கையில் ஈரம் போகவில்லை. பிள்ளைகளின் குண்டி கழுவி, குளிப்பாட்டி, வீடு கூட்டி, சமைத்து, பேன் எடுத்து, உடுப்புத்தோய்த்து... விரல்களுக்கு வயது போய்விட்டதைப் பார்க்கும்போது வழமையான கவலை வந்தது.

"தங்கச்சியின்ரை சடங்கைப் பற்றித்தான் யோச்சுக் கொண்டிக்கிறன்"

"இதில யோசிக்க என்ன கிடக்கு...? அக்காமாற்றை குடும்பங்கள், மாமி குடும்பம், சித்தப்பற்றை வீடு. இன்னும் ரண்டு வீட்டுக்குச் சொல்லிச் சடங்கை முடிப்பம்."

இப்படிச் சொல்ல அம்மாவுக்கும் கஸ்ரம்தான் என்று விளங்குது. பாவம். பழுத்து விழுந்து காய்ஞ்சுபோன பிலாச்சருகு மாதிரி தோலெல்லாம் சுருங்கி மடிஞ்சு கண் மங்கி... பென்சன் எடுக்காமலே உழைச்சுக் கொண்டிருக்கிற மெசின். இப்பவும் பிள்ளையளுக்கு நாளைக்கென்ன சமைச்சுப் பேடலாமெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கும்.

"என்னண்டைணையம்மா... எனக்கு, அக்காவுக்கெல்லாம் ஊரையே கூட்டிச் செய்துபோட்டு இப்ப தங்கச்சிக்கு உப்பிடிச் செய்தா அவள் என்ன நினைப்பாள்...? அவளுக்கெல்லாம் ஞாபகத்திலையிருக்கும்"

"அதுக்கென்னடி பிள்ளை செய்யிறது? வைச்சுக்கொண்டே வஞ்சகம் பண்ணிறம். இருக்கிறதை வைச்சுத்தானே என்னெண்டாலும் செய்யலாம்." அம்மாவுக்குக் கதைக்கவே இளைக்குது. ஆனால் ஒப்புக்கொள்ளமாட்டாள் அம்மாளுக்கு ஏன் இப்படி ஒரு சரித்திரம்...

"கண்ணனை மறந்து போனியளே...?"

"என்னடி கதைக்கிறாய்...?"

"கண்ணனுக்கொரு கடிதம் எழுதுங்கோ என்ன மாதிரி தங்கச்சியின்ரை சடங்கைச் செய்ய யோசிச்சிருக்கிறமெண்டதை. நாங்கள் ஆக்களுக்குச் சொல்லக்கிடையிலை அவன்ரை காசு இஞ்சை வந்திடும்"

"பத்து வருசமாய் அவன் காசனுப்பிக் கொண்டுதானிருக்கிறான். சாப்பாட்டுக்கு, கல்யாணத்துக்கு, வருத்தம், துன்பம் எல்லாத்துக்கும் அவன்தான் தாறான்." அம்மாவுக்குக் கண் கலங்கிறதைக் கண்டும் காணாத மாதிரி...

"அவன் உங்கடை சொந்தப் பிள்ளை. பெரிசான தங்கச்சியின்ரை சொந்தத்தமையன். அவன் செய்ய விரும்பினாலும் நீங்கள் விடமாட்டியள் போலை..."

அம்மா கனக்க யோசிக்கிறா. அவவுக்கு மட்டும் விருப்பம் இருக்காதே. காசுக் கணக்கைப் பாத்துத்தான் சின்னனாய் செய்வம் எண்டிருப்பா. கண்ணன் காசனுப்பி அந்த மாதிரி அட்டகாசம் பண்ணப்போறா. எப்பிடியும் அம்மாதானே...!

அம்மா

அவள் சொன்னது சரிதான். ஆனா எல்லாத்துக்கும் கண்ணனெண்டால்...

பிள்ளையின்ரை கடிதத்தை மடிக்குள்ளிருந்து எடுத்தாள். ரண்டாவது மோள் வாச்சுக் காட்டினது. திருப்பிப் படிக்கக் கண்பார்வை பத்தாட்டிலும் மடியிலை முடிஞ்சு வைச்சிருக்கிறதிலை ஒரு...

... நீங்களே ஒரு பொம்பிளையைப் பாத்துச் சொல்லுங்கோ. கட்டுறன். இப்பவே நீங்கள் உங்கை எல்லாம் பாத்து முடிச்சாத்தான் நான் ஏஜென்சியைப் பிடிச்சு இஞ்சை கூப்பிடுற அலுவலிலை இறங்கலாம். இப்ப வெளிக்கிட்டாலே எப்பிடியும் இஞ்சை வந்து சேர ஒண்டு ஒண்டரை வருசமாகும். எல்லா றூட்டும் இப்ப கரைச்சல் அடுத்த கடிதத்திலை பொம்பிளை ஆரெண்ட விபரத்தை எதிர்பார்க்கிறன் ஆளின்ரை போட்டோவையும் மறக்காம அனுப்பி விடுங்கோ...

எதைச் செய்ய...?

பொம்பிளை தேடுறதா...?

மோனின்ரை சடங்கைப் பற்றி எழுதுறதா...?

அண்டாடச் செலவைப் பற்றியா... அல்லாட்டி புதுசா வேண்டின கடனுகளைப் பற்றியா...?


சீதனம், கலியாணம்: சடங்கு, சண்டை, பங்கர், அகதி முகாம், பட்டினி, வருத்தம், பிள்ளியள்... எத்தினையைச் சந்திச்சாச்சு. இனிச் சாவொண்டுதான் மிச்சம்.

கண்ணன்

பன்ரண்டரைக்குத்தான் கடைசி ஆளும் சாப்பிட்டு முடிந்து வெளியேறியது. மிக வேகமாய் கோப்பைகள், பாத்திரங்களைக் கழுவி, தரையைச் சுத்தமாக்கி, நாளைய சமையலுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வைத்துவிட்டு றெஸ்ரோறண்டைவிட்டு வெளியே வருகையில் கடைசி ட்ராம் வந்து கொண்டிருந்தது. ஓடிப் போய் ஏறிப் பின் இருக்கையில் சரிந்தபோது... அப்பாடா!

ட்ராமில் பியர் வெறியில் பாடிக் கொண்டிருந்த ஒரு டெச்சுக்காறனைத் தவிர வேறு யாருமில்லை. இந்த நேரத்தில் ஆர் வரப்போகினம். அவனவன் வீட்டிலையிருந்து பியறடிச்சுக் கொண்டோ, ரீ. வி. பாத்துக் கொண்டோ, மனிசியோடை கொஞ்சிக் கொண்டோ கிடப்பாங்கள்.

தலையிடி. இண்டைக்குப் பேய்ச் சனம் சாப்பிட வந்திட்டுது. குசினிக்குள்ள ரண்டு பேர் மட்டும். கூட ஆக்களை வேலைக்குப் போட்டா செவ்வுக்கு நட்டமாம். நல்லா முறிஞ்சாச்சு. கையைப் பார்க்க யுராசிப்பாக் டைனோசோரின்ரை தோலைப் போல... பாத்திரங்கள் கழுவுறதுக்கென கெமிக்கலை எங்கைதான் தேடிப் பிடிச்சு மலிவாய்



வேண்டியாறானோ... கையைத் திண்டிடுகுது. அக்காவின்ரை கலியாணத்துக்கெண்டு கடன்பட்ட காசைக் குடுத்து முடிச்சா இந்தச் சனியன் பிடிச்ச வேலையை விட்டிட்டு...

ட்ராமிலிருந்து இறங்கி வழக்கம் போல பெட்டிக்கடைக்குப் போய் ஒரு ரின் பியர் வாங்கிக் குடிக்கையில்... ஆகாஆனந்தம். பசி. றெஸ்ரோறண்ட் எண்ணெய் சக அசிங்கத்தை நினைச்சா அங்கை சாப்பிட வெறுக்குது. இரண்டைக்குச் சாப்பிடேலை. வீட்டை போய் சமைக்கலாமா? சாமத்திலை உலை வைச்சு... கறி வைச்சு... விடிஞ் சிடும். ஆர் இருக்கினம் சாப்பாடு தர? பட்டினிதான்.

அறைக்கு வந்தபோது வெறுமை. சேகரின் அறை பூட்டியிருந்தது பத்து வருசறூம்மேற். கலியாணம் கட்டின நாளிலயிருந்து அறையைப் பூட்டிக் கொண்டுதான் படுக்கிறான். மனிசியுடன். மூண்டு மாதத் தம்பதிகள். என்னென்ன செய்யக் கிடக்கோ...!

உடுப்பு மாற்றி, முகம் கழுவி, சாரத்திற்கு மாறி, கட்டிலுக்கு வந்தபோது பக்கத்து அறையிலிருந்து சேகரும், மனிசியும் கிசுகிசுத்துக் கொள்வது கேட்டது.

ஜேமனிக்கு வந்த நாளிலையிருந்து ஒண்டாயிருந்த எல்லாருமே கலியாணம் முடிச்சிட்டாங்கள். சேந்து சாப்பிட்டு, குடிச்சு, முஸ்பாத்தி பண்ணின எல்லாருமே பெண்சாதிமார் வர தனி அறை எடுத்துக் கொண்டு போட்டாங்கள். சேகரும் வேறை அறை பாக்கிறதாய் சொல்லியிருக்கிறான், பிறகு... நான் தனியத்தான். நானே சமைச்சு நானே சாப்பிட்டு நானே படம் பாத்து, நானே சோகப்பாட்டு கேட்டு, நானே

படுத்து... சாய் இன்னும் எத்தினை நாளைக்கு வெக்கத்தைவிட்டு அம்மாவுக்கு எழுதியாச்சு. எப்பிடியும் பதில்... இண்டைக்கேதேன் கடிதம்...?

மேசையில் வெளிநாட்டுறை. பக்கத்திலை ஒரு சின்னத் துண்டு. மத்தியானம் அக்கா வவுனியாவிலிருந்து போன் பண்ணினவா. நாளைக்கு காலமை இந்த நம்பரிலை நிப்பாவாம். கட்டாயம் எடுக்கட்டாம். சேகர்தான் எழுதி வைத்திருக்கிறான். என்னத்துக்கு அக்கா போன் பண்ணினா...! பிள்ளையள் ஆருக்கேன் சுகமில்லையோ...? ஆமிக்காறங்கள் பிரச்சினையோ...? நாளைக்கு அடிச்சு கதைச்சாப் போச்சு. ரெலிபோனுக்கும் காசு கட்டாம சிவப்புத் துண்டு வந்திட்டுது.

கடிதத்தை எடுத்து விலாசம் பார்த்தா... அம்மா! பளிச்சென்று சின்னச் சந்தோசம். உடைக்காமல் தடவிப் பார்த்தால்... உள்ளுக்கை போட்டோ இருக்கிற மாதிரித் தெரியேலை. சில வேளை நெகரிவ் தான் கிடைச்சிருக்கும்.

வேகமாய் உடைத்து... அக்காவின்ரை எழுத்து. அம்மா சொல்லச் சொல்ல எழுதியிருக்கிறா. பொம்பிளை பாக்கச் சொல்லி எழுதினதையும் அவதான் வாசிச்சுக் காட்டியிருப்பா. வெக்கமாயிருந்தது. இந்தக் கடிதத்திலை ஏதாவது பகிடி விட்டிருப்பா.

ஒரே மூச்சில் கடிதம் முடிஞ்சிது '... இப்படிக்கு உன்ரை அமமா' வரை எந்த இடத்திலையும் கேடடெழுதின விசயத்தை பற்றி மூச்சே இல்லை.

மறந்து போச்சினமோ?

வேணுமெண்டு விட்டிட்டினமோ?

சீ... எனிப்பிடி நினைப்பான் அவை ஆர்...? என்ரை அம்மா. என்ரை சகோதரங்கள். அநேகமாய் போட்ட கடிதம் கிடைச்சிருக்காது. வெளிநாட்டுக் கடிதம் எண்டபடியால் உள்ளுக்கை காசு கிடந்தாலும் கிடக்குமெண்டிட்டு ஆரென் உடைச்சிருப்பாங்கள். நாசமாய் போக. இப்ப...

தங்கச்சியின்ரை சாமத்தியச் சடங்கு!

எடுத்த கடனுகள் முடியேலை. இதுக்கு காசு...? ஆற்ற காலிலை விழுகிறது. வாங்கிற முக்காச் சம்பளத்திலை வட்டி கட்டி, வீட்டு வாடகை, கறன்ற், குப்பைக்குக் கட்டி, பிரயாணங்களுக்குச் செலவழிச்சு, சாப்பாட்டுக்கு, ரெலிபோனுக்குக் கட்டி... ஐயோ உலக வங்கியா கடன் தரப் போகுது.

லைற்றை நிற்பாட்டிக் கட்டிலில் விழுந்தபோது மனசு பாரமாயிருந்தது, காசுக் கணக்குகள் மின்னி மறைந்தன, சாமத்து நிசப்தத்தில் பக்கத்து அறையில் இருந்து முனகல்கள் கேட்டன. சேகரும் அவன்ரை மனிசியும்...

சேகர் இப்ப என்ன செய்து கொண்டிருப்பான்...?

முனகல்களைத் தவிர்க்க ரி.வி.யை உயிர்ப்பித்தால்... நிலமை தெரியாமல் யாரோ யாருக்கோ கொஞ்சியபடி உடுப்புகளை அவசரமாய் அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள்.

சேகர் இப்ப என்ன செய்துகொண்டிருப்பான்...?

கசியும் முனகல்களில், ரி.வி.யின் காட்சிகளில் உடலின் வெக்கையில் அறை திமிறியது.

கை சாரத்திற்குள் நழுவியது.

மனசும் உடலும் இறுகி இறுகி... திகைத்து... இளகத் தொடங்குகையில்...

கண்களும் ஈரமாகின.

நிறப்பிரிகை / டிசம்பர் 1994 / தமிழ்நாடு


# இலங்கை நீர்கொழும்பு வயோதிபர் இல்லத்திற்கு நிதி சேர்த்தல்

ஆதரவற்ற, கைவிடப்பட்ட வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு இல 100 கடற்கரை தெரு, நீர் கொழும்பு இலங்கையில் இலவச வயோதிபர் பராமரிப்பு இல்லம் ஒன்றை அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை ஆரம்பிக்க உள்ளது. இதற்கு இலங்கை ரூ 40 மல்லியன் தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் 60 முதியோர்கள், அதன் பின்பு அதிகரிக்க உள்ளோம்.

இச்சபை, இல 201/1 மகாவத்தை கொழும்பு 14இல் கடந்த 40 வருடங்களாக "அன்பு இல்லம்" என்ற பெயரில் இலவச வயோதிபர் இல்லம் ஒன்றை நாடாத்தி வருகிறது. இங்கே தற்பொழுது பல இன மதங்களைச் சேர்ந்த ஆண், பெண் முதியோர் 60 பேர் பராமரிக்கப்படுகின்றனர். கடவுளின் கிருபையால் கருணை உள்ளம் படைத்தோர் நன்கொடையில் இவர்களின் லௌகீக, ஆத்மீக தேவைகளை சிறப்பாக கவனித்து வருகிறோம்.

நீர்கொழும்பில் புதிய வயோதிபர் இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதன் நோக்கம் இங்கே ஆதரவின்றி கைவிடப்பட்டு கஷ்டப்படும் வயோதிபர்கள் பலர் உள்ளனர். இவர்கள் மீது அனுதாபம் கொண்டு உதவ விரும்புவோர், கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை கடந்த 90 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் சேவையாற்றி வருகிறது. அதன் தலைமையின் வழிகாட்டலில் தற்பொழுது 41 கன்னியாஸ்திரி மடங்கள், 23 பாடசாலைகள், 20 இளைஞர் இல்லங்கள் இன்னும் பாலர்கள், முதியோர்கள் இல்லங்களையும் நடத்தி வருகிறது. மக்கள் சேவையே அதன் இலட்சியம், மேலதிக விபரம் வேண்டுவோர் கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள கன்னியாஸ்திரிகளைத் தொடர்பு கொள்ளவும்.



# Request for Funds to Elders Home in Negombo, Sri Lanks

Apoatobic Carmel Sisters in Sri Lanka are about to start a Charitable Elders House at No. 100, Sea Street, Negombo, Sri Lanka for the benefits of deserted and destitute elders. This is our Second Project costing SL. Rs. 40 Million to accommodate 60 Elders at the start and to increase the number later.

Our First Project for Elders, under the name "Home of Compassion" has been functioning at No. 201/1, Mahawatta, Colombo 14 for the last 40 years. Presently there are 60 Elders, both males and females of all casts races and religions. With the Grace of God and with well wishers `supports and public donations, we run this Home and look after the elders' physical and spiritual needs to the best of our abilities.



Negombo is selected for our Second Project where several elders suffer without any care and attention. Those who sympathise with them and wish to help them are kindly requested to send their contributions to the Credit of Account No. 107320117170 at the MUTUWAL Branch of NATIONAL SAVINGS BANK, Sri Lanka operated in the name of HOME OF COMPASSION, No. 201/1, Mahawatta, Colombo, 14, Sri Lanka.

The Congregation of Apostolic Carmel Sisters counting over 90 years of service in Sri Lanka presently run 41 convents, 23 schools, 20 children homes and homes for babies and elders in all parts of Sri Lanka under the guidance of Provincial Superior. Our Mission is to serve humanity.

Contributors can contact the following to get more details, if required:

(1) **Rev. Sister Rubika AC,**
Provincial Superior
Tel. : +94714524855
maryrubika@gmail.com

(2) **Rev. Sister Gnanadarshini AC,**
Bursar,
Tel. : +94772792848
Marygnana@gmail.com

(3) **Rev. Sister Mena,**
Superior Elders Home
Tel. : +94112522893

(4) **THE APOSTOLIC CARMEL**
Tel: +94112695045
acphsrilanka@gmail.com

# திருமணத்தடை நீக்கும் திருமணஞ்சேரி

"நான்முகன் இந்திரன் மாலோடு
சித்தருந் தேவருந் தெழவே
மத்தர் தாம் அறியார் மணஞ்சேரி வாழ்
அத்தனை அடைந்தார் அல்லல் கருகுமே!"

என்கிறார் அகத்தியர். திருமணத்தடை என்றால் 'திருமணஞ்சேரி' செல் என்பது மட்டுமே உண்மை அல்ல. பற்பல நற்கருமங்களும் திருமணஞ்சேரி உறையும் அத்தனாம் அச்சிவனைத் தொழுபவருக்கு கிடைக்கும். எப்படிப்பட்ட துன்பங்களாயினும் அவை கரும வினையினால் வந்ததாயினும் அல்லது முன்னோர்கள் தம்மால் பட்ட தோஷங்களினால் உண்டானவையானாலும் அல்லது குலதேவ சாபங்கள் நமது வாரிசுகளின் பிரச்சினைகளால் உருவான அல்லல்லகள் ஆனாலும், எவ்வகையின ஆனாலும், அவை போக்கும் ஈசன், இத்திருமணஞ்சேரி நாதனாம், உத்வாக நாதனாம், பக்தவத்சல வள்ளல் பெருமான், அன்னைக்கு கோகிலாம்பாள் என்று திருநாமம். கண்டராதித்ய சோழ சக்ரவர்த்தியின் பட்ட மகிஷி செம்பியன் மகாதேவிக்கு அன்னை கோகிலநாயகி தனது திருமணக் கோலக் காட்சியை அருளினார்.

பார்வதி தேவிக்கு ஒரு ஆசை. பூலோகத்தில் பக்தர்கள் செய்யும் வைதீக முறைப்படி நடக்கும் திருமணச் சடங்கைப்போல, தானும் சிவபெருமானை மணம்புரிய ஆவல் கொண்டார். இதனை கருணை உள்ளம் மிக கொண்ட சிவனிடம் வேண்ட, இல்லை என சொல்லத் தெரியாத சிவனும் அருள் பாலித்தார். உடனே அன்னை ஒரு பசு உருக்கொண்டு பூலோகத்தில் உலாவர, மகாவிஷ்ணுவும் பசுக்களை பராமரிக்கும் பணியை மேற்கொண்டு பசு உருக்கொண்டிருந்த பார்வதி பிராட்டியாரை பராமரித்தார். பரதமுனிவரின் ஆசிரமம் ஒன்று திருவாடுதுறை அருகில் உள்ள திருவேள்விக்குடியில் இருந்தது. தக்க காலம் வந்ததும் பசு உருமாறி பெண் உருக்கொண்டார் அம்பிகை. பரத முனிவர் ஒரு வேள்வியைச் செய்ய, அவ்வேள்வி அக்னியில் சிவபெருமான் தோன்றி அன்னை பார்வதியை, கோகிலவாணியை மணந்தார். இன்றும் அம்பிகை மணப்பெண் கோலத்தில் கோகிலாம்பாள் என்ற நாமத்துடன் கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார். உற்சவ மூர்த்திக்கு கல்யாண சுந்தரமூர்த்தி என்றே பெயர். இவருடைய திருவடியை மணமகளுக்கே உரிய நாணத்துடன் அன்னை கோகிலாம்பாள் நோக்கியபடி மணக்கோலத்தில் தத்ரூபமாகக் காட்சி தருகின்றார்.

"தடைபட்ட தம்பதியர் தம்
வாழ்வு வோங்கிடும் மெய்யே
தாமதித்த மங்கள நாணும்
சடுதியில் கூடும் மெய்யே,
கோகில நாயகிக்கார மணிவித்து
காத்து நிற்க ஊறேது மணந்தனக்கு"

என்றார் அகத்தியர்.

இத்திருமணத்திற்கு ராகு பகவான் எழுந்தருளி தன் தோஷம் களையப் பெற்றார். அதனால் இங்குள்ள ராகு பகவானை 'மங்கள ராகு' என பரத்வாஜ மகரிஷி போற்றுகின்றார். இந்த ராகு பகவான், தனது உடல் முழுக்க பக்திப் பரவசத்துடன் பக்தர்களுக்கு அருள்பாலிப்பதால், இவருக்கு பால் அபிஷேகம் செய்து, பாலில் செய்த பாயசத்தை நிவேதனம் செய்து அருந்தினால், மலட்டுத்தன்மை உடைய மங்கைக்கும் சத்சந்தானம் கிட்டும். இது சத்யம் எங்கிறது நாடி.

"பரவசமான பாம்பும் உருக்காட்டி நிற்க, உவந்த ஆ அமுது கொண்டபிசேகித்து

அமுதும் அஃதலாற்றி உண்ட தம்பதியர் தமக்கு வம்ச விருத்தியுண்டு சத்யஞ் சொன்னோம்"

குயிலின் மென் மொழியாளாம் கோகிலாம்பிகையைத் தொழும் முன், இங்கு உறை சப்த சாகர தீர்த்தத்தில் நீராடுதல் அவசியம். ஏழு கடல்களில் நீராடினால் என்ன புண்ணியமோ அந்த புண்ணியம் இந் புஷ்கரணியில் நீராடினால் கிட்டும். அது மட்டுமல்ல. ஏழுவிதமான சாபங்களும் நீங்கப் பெறுமாம். பட்சி சாபம், மாதா சாபம், பிதா சாபம், மூதாதையர் இட்ட சாபம், குல சாபம், உற்றவுறவினர் சாபம், தேவர்கள் சாபம் போன்றவற்றிலிருந்தும் விடுபட ஏதுவாகும்.

"பிறவி அறுபடும் நின்ற சப்த
சாபமும் கருகும். கடல் ஏழு
மூழ்கிய புண்ணியங் கூடும். வினை
அகல சப்த சாகர தீர்த்தமாடுவீர்
மதிமறையத் தானே"

மதி மறைய என்றால் அமாவாசை என்று பொருள். அதாவது அமாவாசை அன்று இவ்வாறு தீர்த்தமாடுவது பெரும் புண்ணியம் எங்கிறார், அகத்தியர்.

மலர் மாலையை கல்யாண சுந்தரேசுவரருக்கும் கோகிலாம்பாளுக்கும் சாத்துவது வழக்கம். ஆனால் அது ஆத்தி மாலை, கொன்றை மாலை, வில்வ மாலை, மல்லைகை மாலை என அணிவிக்கையில் பலன்கள் மாறுபட்டு திருமண வாழ்வு சிறப்பு பெறுகின்றது என்கிறது அகத்தியர் நாடி. அம்மாலையைப் பாதுகாத்து வைக்கையில் தீட்டுப்படாது காப்பதும் சைவ உணவுகளையே உட்கொள்வதும் அவசியம் என்கிறார் தமது நூலில் அகத்தியர்.

"தேவரிட்ட நாமமிது மணஞ்சேரி
மணமது கூடவே மல்லிகை
மாலை தொடுத்து வள்ளலுக்குச் சூட்டு
வார் வாட்டம் விரைந்தோடும்
வளமான ரதமொரு மச்சுமனை
கட்டி வாட்டமின்றி வாழ்வர் வுண்மையிது.
ஆத்திமாலை கட்டி ஆரதிபோருக்கு
அண்டாதொரு பீடை தானே
கடனுபாதை கருகிப் போம்
காசினியில் கண்டார் தொழ வாழ்வு சேருங்.
கொன்றை மாலை கொண்டார்
பின்னை பிறவியிலும் மணந்து
வாழ்வர் மெய்யே
வில்வத்தால் மாலைகட்டி கோகிலநாயகி
தன்னை தொழுவார் எதிலுஞ்செயம்
பெறுவர் திண்ணமே. நீடு நல்லற
வில்லறம் நடத்தி இறையடி அண்டுவர்
திண்ணமே."

எனவே அவரவர் விருப்பப்படி மாலை அணிவித்து ஆராதித்து, பின் அம்மாலையை வாங்கிச் சென்று தீட்டுப்படாத தனி இடத்தில் வைத்து பூஜித்து வந்தால், திருமணம் நடப்பதும் திண்ணம்; சிறப்பான செழிப்பான வாழ்வும் சேரும் என்பதும் திண்ணம்.

திருமணஞ்சேரி என்பது மனிதர் சூட்டிய பெயர் அல்ல; தேவர்கள், அன்னை பராசக்திக்கும் முக்கண்ணனாராம் சிவபெருமானுக்கும் திருமணம் வைதீக முறைப்படி பூலோகத்தில் நடைபெற்ற இடம் இத என்பதால் 'திருமணஞ்சேரி' என்று சூட்டினர்.

இன்றும் ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை போன்றோர் அனுதினமும் உஷா காலத்தில் இந்த கல்யாண கோல தம்பதி தெய்வங்களை தொழுது இளமை நிலைக்கவும், கலைகள் விருத்தியாகவும் வேண்டிச் செல்கின்றனர். நாமும் நமது அழகு, இளமை இனிதே நிலைக்கவும், நாட்டியம், இசை, நடிப்பு போன்ற கலைகள் விருத்தி ஆகவும், கல்வி தழைக்கவும் நல்ல வாழ்க்கைத் துணை அமையவும் திருமணஞ் சேரி இறையைத் தொழுவோம்.

நாகை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்காவில், குத்தாலத்துக்கு அருகில் உள்ளது திருமணஞ்சேரி. குத்தாலம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பக்கம். கும்பகோணத்திலிருந்தும், மயிலாடுதுறையிலிருந்தும் வெகு அருகாமையில் உள்ளது. •



# அடிமட்டத்திலிருந்து உயர்ந்த மு.க.ஸ்டாலின்

வாரிசாக திணிக்கப்பட்டவர் என்று மு.க.ஸ்டாலின் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சிகள் அடுக்கினாலும் கூட அவரது வளர்ச்சி, சாதாரண திமுக தொண்டர்களைப் போன்றதுதான்.

அதே நேரத்தில் திமுக தலைவரின் மகன் என்பதால் அவருக்கு சில நேரங்களில் சிறப்பு சலுகைகளும் கிடைத்ததும் உண்மை. 1953ம் ஆண்டு கருணாநிதி தயாளு அம்மாள் தம்பதிக்கு மகனாக பிறந்தவர் ஸ்டாலின். 2வது மகனுக்கு பட்டுக்கோட்டையாரின் நினைவாக அழகிரி எனப் பெயரிட்ட கருணாநிதி, 3வது மகனுக்கு ரஷ்யாவின் அதிபர் ஜோசப் ஸ்டாலினின் நினைவாக ஸ்டாலின் எனப் பெயர் சூட்டினார்.

ஒரு முறை, தனது குழந்தைகளுக்கு பெயர் சூட்டியதில் உள்ள உள்ளார்ந்த காரணத்தை விளக்கிய கருணாநிதி, மூத்த மகனுக்கு அவருடைய தந்தை முத்துவேலரின் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக முத்து என்று பெயரிட்டதாகவும், திராவிட இயக்கத்தின் கொள்கை வீரரான புதுக்கோட்டை அழகிரிசாமியின் நினைவாக இரண்டாவது மகனுக்கு “அழகிரி” எனப் பெயர் வைத்தாகவும், சோவியத் நாட்டின் புகழ்மிக்க தலைவரான ஜோசப் ஸ்டாலின் பெயரால் மூன்றாவது மகனுக்கு ஸ்டாலின் என வைத்ததாகவும், தமிழ் மொழியின்பால் கொண்டுள்ள பற்றின் காரணமாக கடைசி மகனுக்கு தமிழரசு எனப் பெயரிட்டு மகிழ்ந்ததாகவும் கூறினார்.

### பள்ளியில் ஆரம்பித்த போராட்டம்...

ஸ்டாலினின் போராட்ட வாழ்க்கை பள்ளிப் பருவத்திலிருந்தே தொடங்கி விட்டது. சென்னை அண்ணா சாலையிலுள்ள சர்ச் பார்க் கான்வென்ட்டில் அவரைச் சேர்க்க விரும்பியபோது, பள்ளி அதிகாரிகள்



புரட்சியாளரின் பெயரைக் கண்டு நடுக்கமுற்று அப்பள்ளியில் பையனைச் சேர்க்க வேண்டுமெனில் அவனுடைய பெயரை மாற்ற வேண்டுமென்று வலியுறுத்தினர். இந்த நிபந்தனையினைக் கேள்விப்பட்ட கருணாநிதி, பள்ளியைத் தான் மாற்ற வேண்டுமே தவிர ஸ்டாலினின் பெயரை மாற்ற முடியாது என்று கூறி விட்டார். இதையடுத்து ஸ்டாலின் அப்பள்ளியில் சேர முடியவில்லை. சேத்துப்பட்டிலுள்ள சென்னை கிறித்துவக் கல்லூரி பள்ளியில் சேர்ந்தார். தந்தையின் அரசியல் பணிகள் காரணமாக இளம் வயதிலேயே ஸ்டாலினுக்கும் அரசியலில் ஆர்வம் இருந்த காரணத்தால் திமுக உறுப்பினரானார்.

அவர் வசித்து வந்த கோபாலபுரம் பகுதியிலேயே அவர் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1967 1968ம் ஆண்டுகள் மு.க.ஸ்டாலின் பள்ளி மாணவராக படித்துக் கொண்டிருந்தபோது தன் நண்பர்களை இணைத்துக் கொண்டு கோபாலபுரம் இளைஞர் திமுக என்ற அமைப்பினை முடி திருத்தும் கடையில் ஏற்படுத்தினார். கோபாலபுரம் இளைஞர் திமுக அமைப்பின் மூலமாக அந்த பகுதியில் இருக்கக் கூடிய மக்களுக்கு பொதுக் காரியங்களை ஆற்றினார்கள்.

## மதுரையில் தொடங்கிய இளைஞரணி வாழ்க்கை...

இப்படிப் படிப்படியாக இளைஞரணி அமைப்பை வளர்த்து அதை அமைப்புரீதியாக 1980ம் ஆண்டு இளைஞரணி மதுரையிலே ஜான்சிராணி பூங்காவிலே தொடங்கப்பட்டு அதற்குப்பிறகு 1980ம் ஆண்டு திருச்சியிலே 2ம் ஆண்டு விழாவிலே 7 பேரை கொண்ட ஒரு அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்புக் குழுவில் மு.க.ஸ்டாலின் ஒரு அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். தமிழ்நாடு முழுவதும் அந்த அமைப்புகுழு சுற்றுப்பயணம் நடத்தி, மாவட்ட, ஒன்றிய, நகர அளவில் இளைஞரணிக்கென்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு ஊரிலும் இளைஞரணியை கட்டியமைத்தார். இதனால் அவருக்கு இளைஞரணி மாநிலச்

செயலாளர் பொறுப்பு தரப்பட்டது.

### மிசாவில் அடிபட்ட ஸ்டாலின்...

ஸ்டாலின் ஆரம்ப காலத்தில் பலமுறை கட்சிக்காக சிறைவாசம் அனுபவித்துள்ளார். 1975ம் ஆண்டு மிசா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவருக்கு பயங்கர அடி உதை விழுந்தது. சென்னை அண்ணா சாலையில் 28.1.1964ல் திமுகவுக்கென ஒரு இடம் வாங்கப்பட்டது. 15.6.1964 அன்று அது திமுக தலைமையகமாக அன்பகம் என்ற பெயரில் திறக்கப்பட்டது. நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் அண்ணா அதனை திறந்து வைத்தார். தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகம் அண்ணா சாலையில் அமைந்துள்ள பிரம்மாண்டமான அறிவாலயத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையில், இளைஞர் அணியின் அலுவலகம் செயல்பட ஒரு இடம் தேவைப்பட்டது. அறிவகத்தை ஒதுக்கித் தரும்படி தலைமைக் கழகத்திடம் இளைஞரணி கோரியது. இதுபோல திமுக தொழிலாளர் அணியும் தனது அலுவலகத்திற்காக அன்பகத்தைக் கோரியது.

### அன்பழகன் வைத்த போட்டி...

புராணத்தில் ஒரு பழத்திற்காக போட்டியிட்ட பிள்ளையார் முருகனைப் போல ஒரு அலுவலகத்துக்கு இரண்டு அணிகளும் போட்டியிட்டதால் திமுக பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன், யார் முதலில் 10 லட்சம் ரூபாய் கட்சிக்கு நிதி தருகிறார்களோ அவர்களுக்குத்தான் அன்பகம் என ஒரு போட்டி வைத்தார். இதையடுத்து திமுக இளைஞரணிச் செயலாளரான மு.க.ஸ்டாலின் தமிழகம் முழுவதும், சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

காலை, மாலை கொடி கட்சி கொடியேற்றும் நிகழ்ச்சிகளிலும், இரவில் பொதுக் கூட்டங்களிலும் பங்கேற்று ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு 100 ரூபாய், 200 ரூபாய் என வசூல் செய்து அதன் மூலம் 11 லட்ச ரூபாய் நிதி திரட்டினார். கட்சி மேலிடம் கேட்ட 10 லட்சத்திற்கும் மேலாக 1 லட்சத்தை வசூலித்து அதனை தலைமைக் கழகத்திடம் ஒப்படைத்து அன்பகத்தை இளைஞரணிக்கு பெற்றார். 02.6.1988 அன்று அன்பகத்தில் இளைஞரணியின் தலைமை அலுவலகத்தை பேராசிரியர் அன்பழகன் தலைமையில் தலைவர் கருணாநிதி திறந்து வைத்தார்.

1990ல் நடந்த ஐம்பெரும்விழா பேரணியில் மு.க.ஸ்டாலின் தலைமையில் இளைஞரணியினர் ஒரு ராணுவம் போல் நடைபோட்டு வந்ததைக் கண்ட அன்றைய பிரதமர் வி.பி.சிங், இந்த இளைஞரனின் தலைமையில் இவ்வளவு பேர் கட்டுக்கோப்புடன் நடைபோட்டு வருகிறார்களே என அருகிலிருந்த கருணாநிதியிடம் கேட்க, திமுக இளைஞரணி செயலாளர்என் மகன் ஸ்டாலின் என கருணாநிதி பதிலளித்தார்.

### மேயரானார்...

அரசியலில் பல காலமாக ஈடுபட்டு வந்த போதிலும் கூட எடுத்த எடுப்பிலேயே பெரிய பதவி ஸ்டாலினைத் தேடி வந்து விடவில்லை. இளைஞர் அணியின் செயலாளராக தீவிரமாக ஈடுபட்டு வந்த நிலையில் அவருக்கு 'ஆசிட் டெஸ்ட்' வைப்பது போல சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கான வாய்ப்பை வழங்கினார் கருணாநிதி. ஸ்டாலின் மேயராவதற்கு முன்பு வரை மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் வகையில் மேயர் பதவி இல்லை. கவுன்சிலர்கள்தான் மேயரைத் தேர்ந்தெடுத்தனர்.

ஆனால் முதல் முறையாக 1996ம் ஆண்டு, பஞ்சாயத்து ராஜ் சட்டம் திருத்தப்பட்ட பின்னர் நடந்த தேர்தலில் ஸ்டாலின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர் என்ற பெருமையைப் பெற்றார். மேயர் பதவியில் இருந்தபோது ஸ்டாலினுக்கு சென்னை மக்களிடையே பெருத்த வரவேற்பு கிடைத்தது. துப்புரவுப் பணிக்கு முன்னுரிமை அளித்தார்.

சிங்கப்பூரில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள பிரெஞ்சு நிறுவனமான ஓனிக்ஸ் நவீன முறைகளைப் பயன்படுத்தி குப்பைகளை அகற்றி வந்தது. சென்னையில் மூன்று மண்டலங்களில் துப்புரவுப் பணியை மேற்கொள்வதற்காக பகிரங்க



ஒப்பந்த புள்ளி மூலம் இந்நிறுவனம் தெரிந்தெடுக்கப்பட்டது. இவ்வாறு சென்னை மாநகராட்சியே குப்பைகளை அகற்றுவதில் நவீன முறைகளைப் பயன்படுத்திய முதல் மாநகராட்சியாகும்.

**மேம்பாலங்கள்...**

மேயராக இருந்து ஸ்டாலின் செய்த மிகப் பெரிய சாதனை சென்னை நகரில் சிறு சிறு மேம்பாலங்களைக் கட்டியதுதான். பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக முறையாகத் திட்டமிட்ட பின்னர் தமிழ்நாடு அரசிடமிருந்து அனுமதி பெற்று 9 இடங்களில் மேம்பாலங்கள் கட்டப்பட்டன. இதுதவிர 18 முக்கிய சந்திப்புகளில் பூங்காக்களும், நீரூற்றுகளும் அமைக்கப்பட்டன. 81 பூங்காக்கள் சுத்தப்படுத்தப்பட்டு முறையாகப் பராமரிக்கப்பட்டன.

ஆசியாவின் இரண்டாவது மிகப் பெரிய கடற்கரையான சென்னை மெரீனாவில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பெரம்பூரிலுள்ள ஆடுமாடு இறைச்சிக்கூடம் சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில் நவீன முறையில் பராமரிக்கப்பட்டது. இத்தகைய சாதனைகளின் பலனாக 2001ம் ஆண்டு 2வது முறையாக அவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ஜெ பறித்த பதவி...**

இருப்பினும் 2002ம் ஆண்டு ஸ்டாலினின் பதவியைப் பறிக்கும் வகையில் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தார் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா. ஒரே நபர் இரு அரசுப் பதவிகளில் இருக்க முடியாது என்று அந்த சட்டத் திருத்தம் கூறியது. இதன் காரணமாக, தனது எம்.எல்.ஏ. பதவியை வைத்துக் கொண்டு மேயர் பதவியிலிருந்து விலகினார் ஸ்டாலின்.

**முதல் முறையாக அமைச்சர்...**

கருணாநிதி தலைமையில் சட்டமன்றத் தேர்தலில் திமுக அணி வெற்றி பெற்று கருணாநிதி, ஐந்தாவது முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்க, தமிழகத்தின் உள்ளாட்சித்துறை அமைச்சரானார் மு.க.ஸ்டாலின். இதுதான் முதன் முதலாக ஸ்டாலின் ஏற்ற அமைச்சர் பதவி. ஆரம்பத்திலிருந்தே சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில்தான் போட்டியிட்டு வருகிறார் ஸ்டாலின். இந்தத் தொகுதியை அதிமுகவிடமிருந்து தட்டிப் பறித்தவர் ஸ்டாலின். நான்கு முறை இங்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1984ம் ஆண்டு முதல் முறையாக் இங்கு அவர் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றார் ஸ்டாலின்.

நாடகத்தில் ஆர்வம்...

தந்தையைப் போலவே ஸ்டாலினுக்கும் ஆரம்ப காலத்தில் நாடகங்களின் மீது ஈடுபாடு பிறந்தது. இதனால் நாடகத்திலும் நடித்தார். ஸ்டாலின் நடித்த முதல் நாடகம் திருவல்லிக்கேணி என்.கே.டி.கலா மண்டபத்தில் அஞ்சுகம் நாடக மன்றம் நடத்திய "முரசே முழங்கு" என்ற நாடகமாகும். இந்நாடகம் கலைஞர் முன்னிலையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையில் நடந்தது. இந்நாடகம் பல இடங்களிலும் நடத்தப்பட்டது. நான்கு ஆண்டுகள் கழித்து அதன் வெற்றிவிழா திருவல்லிக்கேணியில் அதே மேடையில் நடத்தப்பட்டது.


இதேபோல, திண்டுக்கல் தீர்ப்பு, நீதி தேவன் மயங்குகிறான், நாளை நமதே என பல நாடகங்களில் நடித்துள்ளார் ஸ்டாலின். அத்தனையும் திராவிட இயக்கத்தின் கொள்கை விளக்க நாடங்கள் ஆகும். இந்த அனுபவமே பின்னாளில் குறிஞ்சி மலர், சூர்யா என டிவி நாடங்களிலும், ஒரே ரத்தம், மக்கள் ஆணையிட்டால் என இரு திரைப்படங்களிலும் நடிக்க தூண்டியது ஸ்டாலினை.

1993ம் ஆண்டில் இளைய சூரியன் என்ற தமிழ் வார இதழைத் தொடங்கி ஆசிரியருமானார். பல்வேறு தலைப்புகளில் அரசியல், திரைப்படச் செய்திகள், கதைகள், கவிதைகள், வினா விடைகள் என அனைத்தும் அதில் இடம் பெற்றிருந்தன. 1994 ம் ஆண்டு வரை இளைய சூரியன் வெளிவந்தது. தந்தையைப் போலவே எழுத்திலும் ஆர்வம் கொண்டவர் ஸ்டாலின். இதன் பயனாக முரசொலியில் 'உங்களில் ஒருவன்' எனும் தலைப்பில் கட்டுரைகளை எழுதி வருகிறார். நெல்லையில் இளைஞரணியின் முதல் மாநாடு பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதுதான் ஸ்டாலினின் அரசியல் மணி மகுடத்திற்கான முதல் அடிக்கல் எனலாம்.

சாதாரண உறுப்பினராக சேர்ந்து களப்பணியாற்றி வட்டப் பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர் என முறைப்படி தேர்வு பெற்று களப்பணிகள் வாயிலாக கட்சியின் பொறுப்பு படிக்கட்டுகளில் ஒவ்வொரு படியாக உயர்ந்து இளைஞர் அணிச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர் என்று உயர்ந்தார் ஸ்டாலின். அரசியல் வாழ்க்கையில் எதிர்க்கட்சிகளின் சூறாவளியைவிட, திமுகவுக்குள்ளேயே வைகோ என்ற புயலை சமாளிக்கத்தான் ஸ்டாலின் பெரும் பாடுபட்டார். வைகோவின் விஸ்வரூப வளர்ச்சி ஸ்டாலின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கும் என அப்போது கருதப்பட்டது. ஆனாலும் காலத்தின் கோலமாய், வைகோ கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஸ்டாலினுக்கான தடைக்கல் முற்றிலும் நீங்கியது. வைகோவின் வெளியேற்றத்திற்குப் பின்னர்தான் ஸ்டாலின், திமுகவில் வேகமாக வளர்ந்தார் என்று கூடக் கூறலாம்.

இருப்பினும் சொந்த சகோதரரான மு.க.அழகிரி இன்னொரு சவாலாக உருவெடுக்கவே மீண்டும் திமுகவுக்குள் குழப்பம். ஆனால் இதையும் கூட கருணாநிதி படுசாதுரியமாக சமாளித்தார். இருவருக்கும் இடையில் நிலவிய பூசலை தணித்து, இருவரையும் சேர்ந்து செயல்பட வைத்தார். அவரவர் பணியை அவரே பிரித்துக் கொடுக்க, சகோதரர்கள் இருவரும் இப்போது இரட்டைக் குழல் துப்பாக்கி போல இணைந்து, இயைந்து செயல்பட்டு வருகின்றனர்.

40 வயதுக்கு மேல் மதிக்க முடியாத அளவுக்கு ஒரு டிரிம்மான தோற்றம் ஸ்டாலினுக்கு. பலரையும் வியப்படைய வைக்கும் விஷயம் இது. உடற்பயிற்சியை தினசரி தவறாமல் மேற்கொள்பவர் ஸ்டாலின். இதுதவிர கிரிக்கெட், கம்ப்யூட்டர் கேம்ஸ், பேட்மின்டன், செஸ், கேரம் உள்ளிட்டவற்றிலும் ஆர்வம் கொண்டவர். தந்தையைப் போலவே கிரிக்கெட் மீது தனிப் பாசம் கொண்டவர். மு.க.ஸ்டாலினின் இன்றைய வளர்ச்சி துணை முதல்வர் என்ற நிலையில் இருந்தாலும் கூட அவரது அடுத்த விஸ்வரூபம் என்ன என்று சொல்லாமலேயே அனைவருக்கும் தெரியும்.



பிள்ளையார்பட்டி மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஏப்ரல் 30-ம் தேதி அன்று நடைபெறவுள்ளது.

# 2017, என் நினைவுகளின் 2

# பொன்விழா ஆண்டு..

தமிழகத்திற்கு அடிக்கடி வந்து போகிறவன் என்கிற வகையில், கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நேரில் பார்த்து வந்திருக்கிறேன். அவற்றில் சில மகிழ்ச்சியையும், வசதிகளையும் கொண்டு வந்து சேர்த்திருந்தாலும், மனத்திற்கு மறக்கமுடியாத நினைவுகளாகத் தங்கிப் போய்விட்டவையும் சில உண்டு.

சென்னையின் அடையாளங்களுள் ஒன்றாக இருந்த அடையாறு ஆலமரம் மிக முக்கியமானது. சுமார் நான்கு நூற்றாண்டுகளைக் கடந்து, ஒரு ஊருக்கே நிழல் தரக்கூடிய அளவுக்கு விழுதுகளை ஊன்றி, கிளைகளைப் பரப்பி.. எத்தனை கம்பீரம் தெரியுமா? இந்த ஒற்றைமரம் படர்ந்து தழைத்து ஆக்கிரமித்திருக்கும் இடத்தின் பரப்பளவு மட்டும் 40 ஆயிரம் சதுர அடி.. என்றால், அதன் தோற்றத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்... இத்தனை பெரிய ஆலமரத்தையும் ஒரு நாள் இயற்கை சீண்டிப்பார்த்தது.. 1989இல் வீசிய புயல்காற்றில், அடையாறு ஆலமரத்தின் அடி மரத்தின் ஒரு பகுதி சாய்ந்தது... இப்போது விழுதுகள் அதனைத் தாங்கி நிற்கின்றன.. "ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி" என்று வாழ்த்துவார்களே.. நினைவிருக்கிறதா? அப்படி வாழ்க்கையின் பல அர்த்தங்களை புதுப்புது விளக்கங்களை நமக்குச் சொல்வதுபோல் இருக்கும் அந்த ஆலமரம்.. தலைநகர் சென்னைக்கு வருபவர்கள், அடையாறு சென்று ஆலமரத்தைப் பார்க்காமல் செல்ல மாட்டார்கள். இன்று அந்த ஆலமரம் பெரிய அளவில் யாரையும் ஈர்ப்பதாகத் தெரியவில்லை.. அடையாறு ஆலமரத்தைப் பார்க்காத சென்னை வாசிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்..

இதேபோல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் அப்போது, ஓர் அதிசயம் நிகழ்வது உண்டு.. அங்குள்ள வேதகிரீஸ்வரர் மிகவும் புகழ்பெற்ற சிவாலயம். திரிபுரசுந்தரி அம்மன் என்ற பெயரில் பார்வதி தேவியும் அங்கே எழுந்தருளியுள்ளார். அங்குள்ள மலையடிவாரத்திலும், மலை உச்சியிலுமாக கோவில் அமைந்துள்ளது. அங்கு, தினமும் உச்சிகால பூஜையின்போது, மலைமேல் அமைந்துள்ள கோவிலின் மேலே இரண்டு கழுகுகள் வட்டமிடும்.. கோவில் பூசாரி, பூஜைக்குப் படைத்த பிரசாதத்தைக் கொண்டு போய் பாறையில் அமர்ந்தவாறு கழுகுகளுக்குக் கொடுப்பார்... அந்த கழுகுகளும் சற்றும் பயமின்றி.. வேதகிரீஸ்வரரின் பிரசாதம் தங்களுடைய உரிமை என்பதுபோல், நாள்தவறாமல் வந்து உண்டுவிட்டுச் செல்வதைப் பார்க்கலாம்.. இந்த அதிசயக் காட்சியைப் பார்க்க பக்தர்கள் மட்டுமின்றி வெளிநாட்டினர் உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளும் கூட்டம் கூட்டமாக வருவார்கள்... கழுகுகள் வந்து உணவைப் பெற்றுச்செல்வதால்,

திருக்கழுக்குன்றம் என்று பெயர் உண்டானதாகவும் கூறுவார்கள். ஆனால் இன்று அந்த அதிசயத்தைக் காண முடியவில்லை... காரணம் என்னவென்றும் ஊகிக்க முடியவில்லை..,

இப்படி மாற்றங்கள் பல நிலைகளிலும் ஏற்பட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது...போக்குவரத்துக் கட்டணம், தங்கும் விடுதிக் வாடகை என்று எல்லாவற்றிலும் மிகப்பெரிய மாற்றத்தைப் பார்க்க முடிகிறது... சென்னைக்கு வந்து மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், அடையாறு ஆலமரம் உள்பட பல இடங்களையும் 20 ரூபாயில் சுற்றிப்பார்த்துவிடலாம்... சுற்றுலாத்துறை சார்பில் பேருந்து இயக்கப்படும்.. காலையில் புறப்பட்டால், முக்கிய இடங்களைச் சுற்றிக் காண்பித்து, மீண்டும் தொடங்கிய இடத்திலேயே கொண்டு வந்து இறக்கிவிட்டுவிடுவார்கள்...


அன்று வெறும் 20 ரூபாய் செலவில் சுற்றிப்பார்த்த இடங்களை இன்று பார்க்க வேண்டும் என்றால், ஆயிரங்களில் செலவழிக்க வேண்டியிருக்கிறது. போக்குவரத்து வசதிகள் மேம்பட்டுள்ளன... சென்னையில் நினைவுகூர வேண்டிய மற்றொரு முக்கிய இடம், ராஜா அண்ணாமலை மன்றம்.. 1969இல் அனைத்துக் கலைகளின் அரங்கேற்றமும் அங்குதான் பெரும்பாலும் நடக்கும்.. அங்கே ஏராளமான நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்... மறைந்த ஜெயலலிதாவின், "காவிரி தந்த கலைச்செல்வி" நாட்டிய நாடகம் மறக்க முடியாதது... கையில் இருந்த கடைசி கையிருப்பையும் நுழைவுச் சீட்டாக மாற்றி நான் பார்த்து ரசித்த நாட்டிய நாடகம் அது.. இங்கே மறக்காமல் குறிப்பிட வேண்டிய மற்றொருவர், தமிழகத்தின் மிகப்பெரிய நாடகத்துறை ஆளுமையான திரு ஆர்.எஸ்.மனோகர்... ராஜா அண்ணாமலை மன்றத்தில் மனோகரின் பல நாடகங்களைப் பார்த்து மெய்மறந்து போயிருக்கிறேன்.. அவரை இலங்கைக்கு அழைத்துச் சென்று நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்துள்ளேன்.. அந்த நட்பின் அடையாளமாக, ராஜா அண்ணாமலை மன்றத்தில் மனோகரின் நாடகம் நடந்தாலும், முதல் வரிசையில் எனக்கொரு இருக்கை ஒதுக்கப்பட்டுவிடும்.. எத்தனை மகிழ்ச்சியான, சுகமான நாட்கள் தெரியுமா அவை?

தலைநகர் சென்னை 1971இல் எனக்களித்த ஒரு வாய்ப்பு.. என் நினைவுகளில் பெருமைக்குரிய பகுதியாகப் பதிந்து கிடக்கிறது..எனக்குத் திருமணம் ஆன புதிது... நானும் என் மனைவி பத்மினியும், தமிழகத்திற்கு வந்தோம்... எனக்கு நன்றாக நினைவிருக்கிறது... ஏப்ரல் 2ஆம் தேதி, திமுக தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரை நேரில் சென்று சந்தித்தோம்.. புதிதாகத் திருமணமான செய்தியைச் சொன்னபோது, அவருக்கே உரிய அழகிய தமிழிலில், கரகர குரலில் எங்களுக்கு அவர் வாழ்த்துச் சொன்னது, இப்போதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது...

அதன்பிறகு, சரியாக 40 ஆண்டுகள் கழித்து, மீண்டும் திமுக தலைவர் கலைஞரைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது... என்னுடைய ஆருயிர் நண்பர் பேராசிரியர் சுப.வீரபாண்டியனோடு 2011இல் டெசோ நடத்திய கருத்தரங்கில் நானும் பங்கேற்றேன்.. அங்கே மீண்டும் ஒரு முறை கலைஞரைப் பார்த்துப் பேசினேன்... சென்னை பல்வேறு பட்ட அனுபவங்களை கடந்த 50 ஆண்டுகளாக எனக்குத் தந்து கொண்டிருக்கிறது..

இரண்டு விதமான வாழ்க்கைச் சூழலையும் தமிழகத்தில் நான் வாழ்ந்து பார்த்திருக்கிறேன்.. உங்களோடு நானும் சற்றுப் பின்னோக்கிச் சென்று அவற்றை ஒவ்வொன்றாக அசை போடுவதே ஒரு சுகமான அனுபவமாகத்தான் இருக்கிறது...

– நிழலாடும்



சில வருடங்களுக்கு முன்னர் ஒரு சஞ்சிகையிலே படித்த விடயம் நினைவுக்கு வருகிறது. திருமுருக கிருபாநந்தவாரியார் அவர்கள் ஒரு சபையிலே பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த அன்பர் ஒருவர் வாரியார் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்.

'சிவன் கோயில்களிலே பெருமாள் மூர்த்தத்தை வைத்து வழிபடுகிறார்கள், ஆனால் பெருமாள் கோயில்களிலே சிவனை வைத்து வழிபடுவதில்லையே! இது எதனால்?'

இந்தக் கேள்விக்கு வாரியார் அவர்கள் சொன்ன பதில், 'அண்டாவிலே குண்டாவை வைக்கலாம். ஆனால், குண்டாவிலே அண்டாவை வைக்க இயலுமா?'

சைவர்களாகிய நாம் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபட்டு வருகிறோம். நான்கு மறைகளும் சிவனே முழுமுதற் கடவுள் என்றுதான் சொல்கின்றன. தேவார, திருவாசகங்களும் அந்த உண்மையையே உறுதி செய்கின்றன.

சைவ எல்லப்பநாவலர் என்ற அன்பர் பாடிய பாடல் ஒன்று,

சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற்சார் சிவமாம்

தெய்வத்தின் மேற்தெய்வம் இல்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்

மைவைத்த சீர்திருத் தேவார முந்திரு வாசகமும்

உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற்றாள்எம் உயிர்த்துணையே

திரு அருணைக்கலம்பகம்

சிவன்கோயில்களின் அமைப்பை உற்று நோக்கினால், மூலமூர்த்தியாகச் சிவலிங்கம் இருக்கும். அம்பாள் சந்நிதி, நடராசர் சந்நிதிகள் அடுத்து அமைந்திருக்கும்.

# சிவனும் கோயில்களும்

மூலவருக்குப் பின்புறமாக, மேற்கு வீதியிலே, விநாயகர், சுப்பிரமணியர், பெருமாள் முதலான மூர்த்தங்களைப் பிரதிட்டை செய்திருப்பார்கள். முன்புறம் வாசலிலே துவாரபாலகர் வாசலின் இருமருங்கும் இருக்கும். உள்ளே வயிரவர், நவக்கிரகம் (சில கோயில்களில் இல்லை) ஆகிய மூர்த்தங்களை அமைத்திருப்பார்கள்.

விநாயகர் கோயிலிலே, முருகன் கோயிலிலே, அம்பாள் (சக்தி) கோயிலிலே அல்லது பெருமாள் கோயிலிலே ஒருபோதும் சிவலிங்கம், நடராஜர் ஆகிய மூர்த்தங்களை அமைத்து வழிபடும் வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி அமைத்து வழிபடுவதானால், அதற்குச் சிவாகமங்களில் விதி உண்டா என்பதும் தெரியவில்லை.

மேற்கு நாட்டுக்கு வருமுன்னர், ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் பல சைவக்கோயில்களையும் பெருமாள் கோயில்களையும் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அப்படிப் போய்த் தரிசித்த கோயில்களிலும் சிவன் கோயில்களில் அன்றி, வேறு கோயில்களிலே சிவனைப் பிரதிட்டை செய்து வழிபடுவதைப் பார்த்த நினைவு இல்லை.

இப்போது, மேற்கு நாடுகளிலுள்ள கோயில்களிலே சிவலிங்கத்தையும் நடராஜரையும் வைத்து வழிபடும் வழக்கம் வந்துவிட்டது. 'மாற்றம் ஒன்றே மாறாதது, மாற்றினால் என்ன?' என்று சிலர் இதுபற்றி வாதிடுகின்றார்கள். நம் வாழ்க்கையில் நாம் செய்யும் எல்லா விடயங்களிலும் விதிமுறைகள் உள்ளன. எதை எப்படிச் செய்யவேண்டும் என்றொரு முறை இருக்கிறது. விஞ்ஞானத்தில் ஒரு பரிசோதனை செய்வதானால் அதை முறைப்படி செய்தால் மட்டுமே விடை சரியாக இருக்கும். மருத்துவர் நம்முடைய நோய்க்கு மருந்து தந்தால், அதை அவர் சொன்ன முறையிலே சாப்பிட்டால் மட்டுமே நோய் குணமாகும். அதுபோலவே சமய வழிபாடு, ஆசாரங்களில், கோயில் அமைப்புக்களில் நம்முடைய முன்னோர்கள் ஏதோ ஒரு காரணம் கருதித்தான் அவற்றை வைத்துள்ளார்கள்.

கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் ஒவ்வொரு விடயத்தையும் செய்யும்பொழுது கடவுளை வணங்கியே செய்கின்றார்கள். கடவுள் இல்லை என்பவர்களும், சமய வழிபாடுகளை மூடநம்பிக்கை என்று கேலி செய்பவர்களும், பகுத்தறிவாளர் என்று தம்மை அடையாளம் காட்டுபவர்களும் தமிழ்த்தாய் வாழ்த்து என்று ஒரு பாட்டைப் பாடித்தான் விழாவை ஆரம்பிக்கின்றார்கள். கோயிலுக்குப் போவதற்குப் பதிலாக, அரசியல்வாதிகளின் சமாதியிலே போய் வழிபட்டுவிட்டுத்தான் தம் வேலைகளைச் செய்கிறார்கள். ஆக, மனிதர்களுக்கு ஏதோவொரு பிடிப்பு, ஓர் ஊன்றுகோல் தேவைப்படுகிறது. இதை உள்@ரவர் சொன்னால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதையே வெளிநாட்டுக்காரர் சொன்னால் வேதவாக்காக மதித்து ஏற்றுக்கொள்வார்கள். இதுதான் உண்மை. ■

# ஆன்மிகவாதிகளுக்கு
# அரிய சந்தர்ப்பம்

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?

## திருவிழா – சுற்றுலா



மார்கழி மாதம் 6ஆம் திகதி புறப்பட்டு மார்கழி 16ஆம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - திருவண்ணாமலையும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



தொடர்புகளுக்கு

**World Travel & Tour**

**020 84659888**

**020 84659666**

# FOOD WORLD

BEST PRICE - BEST SERVICE - BEST QUALITY

Happy Easter Special Offers



VILLAGE PRIDE COCONUT MILK TIN - 400 ML - EACH 69P, 2 FOR £ 1

RICEY NOODLES 24X70GM - EACH £ 5.99

BASIL DRINKS BON - 24X290ML - EACH £ 11.99

NESTLE MILO 1.8KG - EACH £ 12.99

VANNI PONNI RICE 10KG - EACH £ 8.99

TIPI TIP 14GM - EACH 39P, 3 FOR £ 1

INDO MIE NOODLES 40X70G - £ 5.99

JAY REAL COCONUT MILK POWDER 1KG - EACH £ 5.49

NATCO RED LENTILS 2KG - EACH £ 2.99

NECTO ORANGE BARLEY CREAM SODA 1.5 LT - EACH £ 1.65, 2 FOR £ 3

APOLLO NOODLES 85GM - EACH 49P, 3 FOR £1

PASCO PICKLES / PASTE (260GM - 370GM) - EACH £ 1.29, 2 FOR £ 2

JAY JACKFRUIT TIN 580 ML - EACH £1.29, 2 FOR £1.99

HALDIRAM'S SAVOURIES - EACH £1.49, BUY 1 GET 1 FREE

OFFER VALID TILL 15th MAY 2017

Offer doesn't include the existing special offers.
Offers can be withdrawn without prior notice.

Opening Hours :-
Mon-Sat @ 8am to 10pm
Sunday @ 11am to 5pm


117-119 London Road, Mitcham, Surrey, CR4 2JA
Tel : 0208 6400 511, foodworld.co.uk,
Join our facebook - fb.com/foodworldmitcham


லூசியத்தில் தரமான நகைக்கடை
தினேஷ்
ஜுவல்லரி டெக்ஸ்டைல்ஸ்
Thinesh
Jewellers & Textiles
276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com


லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை
கற்பகம்
தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்
KATPAKAM
உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10



Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்


இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


ஆடை
ஆபரணம் வாங்க
ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும்
நாடவேண்டிய
ஒரே இடம்
Jk Gold House &
Fashion House
314 - 316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677


எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner


Anthoorium
World of Designs
Jewellery
&
Textiles
102, B Burlington Road
New Malden
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk



AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
AYNGARAN
ONDRAGA
FOR FURTHER DETAILS :
020 8543 4477
NOW SHOWING - UK SHOW TIMES
12A
CHILDREN WILL BE ALLOWED
FROM FRI 11TH NOV- AT VUE CINEMAS
VUE CROYDON GRANTS, VUE ACTON, VUE CAMBRIDGE, VUE LEEDS THE LIGHT, VUE PORTSMOUTH
VUE SCUNTHORPE, VUE SWANSEA, NEWCASTLE UL, EDINBURGH OMNI CENTRE
HTTP://WWW.MYVUE.COM / OR CALL : 08712 240 240
FROM FRI 11TH NOV - AT EASTHAM BOLEYN - DAILY SHOWS - CALL : 020 8471 4884
FROM FRI 11TH NOV - AT HARROW SAFARI - DAILY SHOWS - HTTP://WWW.SAFARICINEMA.COM/ OR CALL - 0208 426 03 03
FROM FRI 11TH NOV - AT PICCADILLY BIRMINGHAM - DAILY SHOWS - HTTP://WWW.PICCADILLYCINEMA.COM - OR CALL : 012 1771 0421
FROM FRI 11TH NOV - AT PICCADILLY LEICESTER - DAILY SHOWS - HTTP://WWW.PICCADILLYCINEMAS.CO.UK - OR CALL : 0116 251 8880
FROM FRI 18TH NOV- AT CINEWORLD CINEMAS
FELTHAM, ILFORD, MILTON KEYNES, WEMBLEY, WANDSWORTH, STOCKPORT
ENFIELD, BRADFORD, ABERDEEN QL, GLASGOW SB, SHEFFIELD, CARDIFF
HTTP://WWW.CINEWORLD.CO.UK OR CALL : 0871 220 1000
SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD
STR IN
achcham yenbadhu madamaiyada
GAUTHAM VASUDEV MENON
A.R.RAHMAN
WITH ENGLISH SUBTITLES
JOIN US ON YouTube www.youtube.com/ayngaraneurope
www.facebook.com/ayngaran
web: www.ayngaran.com
https://twitter.com/ayngaran_intl

தானாக உயர்வதுதான்
வயது
விடாமல்
துரத்துவதுதான்
காலம்
தடுக்கமுடியாததுதான்
நேரம்
கடக்கத் துடிப்பதுதான்
இளமை
தொடவேண்டியதுதான்
இலக்கு
இத்தனையும் தான்
வாழ்க்கை


SUN MOTORS



Mechanical / Body Repairs / Recovery / Tyres

Tel : 02086920232

R/O 26 Loampit Hill
Elswick Road, Lewisham
London, SE 13, 7SW



லண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும்
தமிழர் உணவு வகைகள்

லீலா
தயாரிப்புகள்

உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்

புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும்
தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.

Vaani Foods

லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்

தொலைபேசி இலக்கம்
0208 668 7648

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

கோடைகால விடுமுறையை
முன்னிட்டு நகைகள், புடைவைகள்
அனைத்தும் நம்ப முடியாத
விலைக்கழிவில்

கூறைப் புடைவகள்
பட்டுப் புடவைகள்
அனைத்தும்
40% விலைக்கழிவில்



**SELVARAJA**
Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees

YOU ARE THE BEST FOR YOU
WE ARE THE BEST

Tel: 020 8767 3795 Mob: 07825 005 269
162 B, Mitcham Road London SW17 9NJ

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane**
**Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**



# படித்துவிட்டீர்களா?

# சைவநீதி

உங்கள்
வீடுதேடி
இதழ் வர
சந்தாதாரர்
ஆகுங்கள்



உங்கள் திருமணத்தின் ஏழு வைபவங்களையும்
ஆரெம்கேவியின் "பிரைடல் சில்க்ஸ் ஆப் இந்தியா"
பட்டோடு கொண்டாடுங்கள்
93 years of silk heritage
RmKV
Wedding Silks
Bridal Seven
நிச்சயதார்த்தம்
மெஹந்தி
ஊஞ்சல்
முகூர்த்தம்
நலுங்கு
ரிசப்ஷன்
கிருஹப்பிரவேசம்
• சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி | ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்
• கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு
• திருநெல்வேலி: வண்ணார்பேட்டை | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண் • பெங்களூரு - ஒரையன் மால்.
toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks

# FOOD WORLD

BEST PRICE - BEST SERVICE - BEST QUALITY

*Happy Easter Special Offers*

**ADYAR ANANDA BHAVAN SNACKS - EACH 99P, BUY 1 GET 1 FREE**

**CAFFELLERIA MOKATE - 3 IN 1 CLASSIC 79P ONLY**

**MALIBAN GIFT SELECTION BISCUIT 400GM - EACH £1.99, 2 FOR £3**

**MALIBAN TEA TME BISCUIT 200GM - EACH £ 1.50, 2 FOR £ 2**

**PRAN FROOTO MANGO JUICE 260ML - EACH 29P, 4 FOR £1.29**
**CASE OF 24X260ML - £ 5.50**

**MALIBAN CLASSIQUE BISCUIT 500GM - EACH £ 2.99, 2 FOR £ 5**

**MALIBAN LEMON PUFF BISCUIT (3X200GM) - EACH £ 1.20**

## SHOP OVER £ 50 GET £ 5 OFF

## SHOP OVER £ 50 GET 5KG RICE FREE


## SHOP OVER £ 120 GET £ 10 OFF

OFFER VALID TILL 15th MAY 2017

Offer doesn't include the existing special offers.
Offers can be withdrawn without prior notice.

Opening Hours :-
Mon-Sat @ 8am to 10pm
Sunday @ 11am to 5pm

117-119 London Road, Mitcham, Surrey, CR4 2JA
Tel : 0208 6400 511, foodworld.co.uk,
Join our facebook - fb.com/foodworldmitcham


லண்டனில் முதல் நகை கடை
Western Jewellers
Tooting
020 8767 3445
Wemley
020 8903 0909